மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# சிவநெறி

முத்திங்கள் சஞ்சிகை

**நான்காவது ஆண்டு நிறைவு இதழ்**

மலர் 4 SIVANERI - யுவ வருஷம் ஆடி - மார்கழி 1995 இதழ் 4



## உள்ளே


★ விண்ணியல் அமைப்பே சிவநெறியின் செல்வம்

★ அமைச்சரின் ஆசையை நிறைவேற்றிய சோழ மன்னன்

★ வெள்ளிதான் சமய வாழ்வா?

★ தரிசனம் - திருவண்ணாமலை

★ வள்ளுவம் நல்வாழ்வுக்கு வழிகாட்டி

★ ஈழத்தில் சைவம் காத்த பெரியார் ஆறுமுகநாவலர்

★ சிவபிரானின் திரு நடனங்கள்

★ திருப்பாட்டின் முதற்பாட்டு


மாடத்துள்ளான் அவன் மண்டபத்துளான் அவன்
கூடத்துள்ளான் அவன் கோயிலுள்ளான் அவன்
வேடத்துள்ளான் அவன் வேட்கை விட்டார் நெஞ்சில்
மூடத்துள்ளே நின்று முத்தி தந்தானே.

-திருமூலர்-

**விலை**
**15 ரூபா**

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலை இந்து இளைஞர் பேரவையின் காப்பாளர் ஞானசிரோன்மணி **பண்டிதர் திரு. இ. வடிவேல்** அவர்களின் பாராட்டு விழாவின் போது அன்னார் பேரவை நிர்வாகிகளாலும் சைவப்பிரமுகர்களாலும் வரவேற்கப்பட்டு அழைத்து வரப்படுகின்றார்.



ஞானசிரோன்மணி **பண்டிதர் திரு. இ. வடிவேல்** அவர்களால் எழுதப்பட்ட "கோணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்" என்னும் நூல் வெளியீட்டு விழாவில், நூலாசிரியர் மேல் நீதிமன்ற நீதிபதி **திரு. பொ. பாலவடிவேல்** அவர்களினால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். அதன் பின்னர் நூலாசிரியர் பதிலுரை நிகழ்த்துவதைப் படத்தில் காண்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பேரவையால் வழங்கப்படும் முதியோர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவு நிகழ்வைப் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தி /ஹற்றன் தேசிய வங்கியின் முகாமையாளர் திரு. க. அம்சதேவா அவர்கள் ஆரம்பித்து வைக்கின்றார்.




பேரவையிடமிருந்து முதியோர்க்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்கின்ற



பேரவையின் தொழிற்திட்ட கடன் உதவியால் அரசன் என்ற கலைஞரால் உருவாக்கப்பட்ட ஆலயங்களுக்கான வாகனங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பாகங்களிலும் சமயப்பணியும் சமூகப்பணியும், அகதிகளுக்கான பணிகளையும் ஆற்றுகின்ற முதன்மையான இளைஞர்களின் அமைப்பே
திருக்கோணமலை மாவட்ட
இந்து இளைஞர் பேரவை ஆகும்.

# இதன் வளர்ச்சிக்கு தாராளமாக உதவுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

திங்களங் குழவி யென்னத் திகழொரு மருப்பிற் சோதி
தங்குகிம் புரிவ யங்கத் தடாமணி மகுடந் தாங்கித்
துங்கருல் வரங்க ளல்குந் தூயசீ ரிராம சேதுப்
புங்கவர் வணங்கும் யானைமுகத்தானைப் போற்—
றல் செய்வாம்

திருச்சிற்றம்பலம்

(சேதுபுராணம்)

சிவமயம்

திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த

## நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

முன்னெறியாகிய முதல்வன் முக்கணன்
நன்னெறியே சரணாத றிண்ணமே
பந்நெறியே சென்றங்கடைந்தவர்க்கெலா
நன்னெறியாவது நமச்சிவாயவே.

திருச்சிற்றம்பலம்


# சிவநெறி

## முத்திங்கள் இதழ்

393, திருஞானசம்பந்தர் வீதி திருக்கோணமலை.


## அமைதி வேண்டி இறைஞ்சுவோம்

"சிவநெறி" முத்திங்கள் சஞ்சிகை இந்த இத முடன் நான்காண்டுகளை நிறைவு செய்து, இறைவன் திருவருளால் ஐந்தாவது ஆண்டில் அடி எடுத்து வைக் கிறது.

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை சைவத் தமிழ் மக்களின் நல்வாழ்வையே ஒரே நோக்கமாகக் கொண்டு அர்ப்பணிப்புச் சிந்தனை யுடன் பணியாற்றி வருகிறது.

தனது சேவையின் ஓர் அம்சமாகவே "சிவ நெறி" சஞ்சிகையைப் பல நெருக்கடிகளின் மத்தியி லும் பேரவை தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

இந்த நற்பணிக்கு சைவத்தமிழ் மக்கள் தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும் என்று அன்புடன் வேண்டுகிறோம்.

சைவத்தமிழ் மக்கள் இன்று மிகவும் நெருக் கடியான கால கட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர். பல்லாயிரக் கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து வாழ்க்கைப் போராட்டம் ஒன்றையே நடத்திக் கொண் டிருக்கிறார்கள்.

தமிழர் வாழ்வு திருக்கோயில்களை மையமாகக் கொண்டதாகும். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது தமிழ் மக்களின் நிலைப்பாடு.

ஆனால் இன்று கோயில்கள் இருக்கின்றன. அக்கோயில்களுக்குச் சென்று வழிபாடு செய்ய மக் களைக் காணமுடியாதுள்ளது. மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகி வாழுகின்ற துர்ப்பாக்கிய நிலையே இதற்குக் காரணமாகும்.

பெரும்பாலான சைவாலயங்கள் எல்லாம் இன்று செயலிழந்து போயுள்ளன. நித்திய பூசை வழி பாடுகள் இன்றி, கதவுகள் இழுத்து மூடப்பட்ட நிலை யில் அவை காட்சியளிக்கின்றன.

இந்த அவல நிலை நீங்கி, சைவத் தமிழ் மக்கள் வாழ்வில் மீண்டும் அமைதியும் சாந்தியும் ஏற்பட முழுமுதற் கடவுள் சிவபிரானின் திருவடிகளை இறைஞ்சுவோம்.

அட்டைப்பட விளக்கம்

## கோபுர தரிசனம்

## கோடி புண்ணியம்

ஆலயத்தில் மிகவும் உயர்ந்ததாய் ஆகாயத் தை அளாவி நிற்பது கோபுரம். அது ஆலயத்தின் தூலலிங்கம் எனப் பெயர் பெறும். கருவறையில் உள்ளது சூக்குமலிங்கம். தூலலிங்கமாகிய கோபு ரம் நெடுந் தொலைவிலும் காட்சியளிப்பது.

கோபுர தரிசனம் கோடி புண்ணியம் என்றும் கோபுர தரிசனம் பாப விமோசனம் என்றும் பழமொழி கள் வழங்குகின்றன.

தமிழ்நாடு, ஸ்ரீரங்கத்தில் உள்ள அரங்கநாத சுவாமி ஆலயத்தின் கோபுரமே ஆசியாவிலேயே மிகவும் உயரமான இந்து ஆலய கோபுரமாகும். 13 மாடிகளைக் கொண்ட இந்த ராஜ கோபுரம் 236 அடி உயரமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவை "சிவநெறி" என்ற பெயரில் ஒரு சமய சஞ்சிகையை வெளியிட்டு வருவதை அனைவரும் அறிவர்.

பெரியவர்கள், இளைஞர்கள், சிறுவர்கள் என்று அனைவரும் பயன்படும் வகையில், பல நல்ல கட்டுரைகளைத் தாங்கி இவ்விதழ் வெளிவருகிறது.

மக்களது சமய அறிவையும், சமய உணர்வையும் வளர்க்க இத்தகைய சமய சஞ்சிகைகள் பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

நான்கு பயனுள்ள ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள "சிவநெறி" சஞ்சிகையின் பணிகள் மேலும் சிறப்புடன் வளர இறைவனைப் பிரார்த்தனை செய்கிறோம்.

"சிவநெறி" சஞ்சிகையை சிறப்பாக வெளியிட்டு வரும் ஆசிரியர் குழாத்தினருக்கு எங்கள் பாராட்டுதல்கள்.

**சுவாமி ஆத்மகனாநந்தா**
இராமகிருஷ்ண மிஷன்,
வெள்ளவத்தை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# வாழ்த்துச் செய்தி

திருக்கோணமலை இந்து இளைஞர் பேரவையின் ஆன்மீக வெளியீடான "சிவநெறி" வெளியிடப்பட்டு நான்கு வருடங்கள் பூர்த்தியடைவதை முன்னிட்டு யான் மிக்க சந்தோஷம் அடைகின்றேன். இக்காலத்திற்கு இது போன்ற வெளியீடுகள் மிகத்தேவையானது.

பக்தி உணர்வின்றி வெளிவேஷத்திற்காக திரு நீறு அணிவது பிரயோசனமற்றது. சில தேவைகளுக்காக மட்டும் கோயிலுக்குப் போவதும் பிரயோசனமற்றது.

தமிழ்க் கலாசாரத்தில் தரமான சைவ நெறியைக் கடைப்பிடித்தால் நல்ல அனுக்கிரகம் சமுதாயத்திற்கு கிடைக்கும். சைவம் இல்லையென்றால் உண்மையான தமிழ்க் கலாசாரம் இல்லையென்று கருதப்படும்.

திருக்கோணமலை இந்து இளைஞர் பேரவை அற நெறிப் பாடசாலைகள் நடாத்துதல், குரு பூசைகள் செய்தல் போன்றவைகளை நாம் அறிவோம். அத்துடன் மக்களுக்காக சமுதாய சேவைத் தொண்டுகள் பல புரிவதையும் அறிவோம்.

மக்கள் சேவை ஒரு மகேஸ்வரன் சேவை என்பது தெய்வீக மொழியாகும். பொருளாதார முன்னேற்றம் மட்டும் மனிதனுக்கு அமைதியைக் கொடுக்காது என்பதை நாங்கள் மறக்க வேண்டாம்; பக்தி வேண்டும்.

"சிவநெறி" வெளியீட்டில் பக்திக் கட்டுரைகள், சமய சிந்தனைகள் போன்றவை தொடர்ந்து வெளியிட வேண்டுமென்று ஆசி கூறி வாழ்த்துகின்றேன்.

ஆசியுடன்

**சுவாமி தந்திரதேவா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவ சிவ

## திருவண்ணாமலை ஆதீன குரு மகா சந்நிதானம் அவர்களின்

# வாழ்த்துச் செய்தி

திருவருள் திரு. தெய்வசிகாமணி
பொன்னம்ப தேசிக, பரமாசாரிய சுவாமிகள்
(ஆதீனகர்த்தர்),

திருவண்ணாமலை ஆதீனம்,
குன்றக்குடி 623206,
பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர்
மாவட்டம்.
தமிழ்நாடு
குன்றக்குடி - 04577 - 64267,
காரைக்குடி - 04565 - 23215,
நாள்: 26-12-1995.

அன்பிற்சிறந்த "சிவஞானச் செல்வர்"
திரு. செ. சிவபாதசுந்தரம் அவர்களுக்கு,

எல்லா நன்மைகளும் பெருக, திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

தங்கள் கடிதமும், அருள்நெறித் தந்தை தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களை நினைவு கூருமுகமாகத் தாங்கள் வெளியிட்டு அனுப்பிய சிவநெறி இதழ் ஐந்து பிரதிகளும் கிடைத்தன.

தாங்களும், இலங்கை அன்பர்களும் திருவருள் திரு குருமகா சந்நிதானம் அவர்கள்பால் கொண்டுள்ள பெருமதிப்புக்கும் பேரன்பிற்கும் அடையாளமாக அந்த இதழ் விளங்குகின்றது.

தங்களுக்கு நமது உளமார்ந்த நன்றி, வாழ்த்துக்கள்.

மற்றவை தங்கள் கடிதம் கண்டு. என்றும் வேண்டும் இன்ப அன்பு.

**பொன்னம்பல அடிகளார்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணியல் அமைப்பே சிவநெறியின் செல்வம்

பேராசிரியர் **பே. க. வேலாயுதம்**
எம். ஏ. எம். ஓ. எல். எம். பில்.
பெரியார் ஈவெரா கல்லூரி,
திருச்சிராப்பள்ளி.

இந்துமதப் பெரியார்கள் பிரமன் படைத்தற் கடவுள் என்றும், திருமால் காத்தற் கடவுள் என்றும், சிவன் அழித்தற் கடவுள் என்றும் கூறுவர். இந்துக்கள் வழிபடும் மும்மூர்த்திகளுள் சிவன் ஒருவனா? இல்லையாயின், சிவனுடைய தகுதியும் சிறப்பும் என்ன? என்பதை மிக மிகச் சுருக்கமாக ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

## வழிபாட்டின் தோற்றம்

தொடக்கத்தில் மக்கள் அறியாமையின் காரணமாகவும் அச்சத்தின் காரணமாகவும் மரங்கள் போன்றவற்றையும் பாம்பு போன்ற கொடிய விலங்குகளையும் வணங்கினர். காலஞ் செல்லச் செல்ல அறிவு வளர்ந்தது. நன்றியுணர்வின் காரணமாகச் சில பொருள்களை வணங்கினர். நிலம், கடல், சூரியன், சந்திரன், மழை போன்றவற்றை இதற்கு எடுத்துக் காட்டலாம். இவ்வாறு அச்சமும் அன்புமே வழிபாட்டிற்குக் காரணம் என்பதை

"அஞ்சி யாகிலும் அன்புபட் டாகிலும்
நெஞ்சம் வாழி நினைநின்றி யூரைநீ"

என்கிறார் அப்பரடிகள்.

## மும்மூர்த்திகள் வணக்கம்

மக்கள் நன்றியின் காரணமாக வழிபட்ட பொருட்களில் மக்களின் வசிப்பிடமாய நிலமும், உயிரை வாழ்விக்கும் மழைக்குக் காரணமாய கடலும், எல்லாவற்றிற்கும் மேலாக நின்று காக்கும் சூரியனும் முதன்மை பெற்றன.

அதனால், நிலத்தை அயன், பிரமன் என்ற பெயராலும், கடலை மால், அரி என்ற பெயராலும், சூரியனை உருத்திரன் என்ற பெயராலும் வணங்கினர். நிலத்தைப் படைத்தற் கடவுளாகவும், கடலைக் காத்தற் கடவுளாகவும், சூரியனை அழித்தற் கடவுளாகவும் எண்ணி வழிபட்டனர்.

நிலத்தில் கலைகள் வளர்ந்ததால் கலைமகளைப் பிரமனுக்கு மனைவியாக்கினர்; பவழம் போன்ற செல்வங்கள் கடலிடத்துத் தோன்றுபவையாதலின் திருமகளைத் திருமாலுக்கு மனைவியாக்கினர்; சூரியனிடத்துள்ள சக்தியை உருத்திரனுக்கு மனைவியாக்கினர்.

மும்மூர்த்திகளில் அழித்தற் கடவுள் உருத்திரனே யன்றி, சிவன் அல்லன். இவர்களினும் வேறானவன் சிவன்.

## சிவன் தோற்றம்

இவ்வாறு மூவரும் தனித்தனியாக இருந்த பொழுது அவர்களை வழிபாடு செய்வாரிடையே தத்தம் கடவுளே உயர்ந்தவர் எனக் கலகங்கள் தோன்றின இவற்றைக் கண்ட சமுதாய நலன் விரும்பிய சமயச் சான்றோர்கள் பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூன்று கடவுளரையும் இணைத்து "மூவன்" அல்லது "சிவன்" எனப் பெயரிட்டனர். மூவன் என்னும் சொல்லுக்கு "மூவரையும் தன்னிடத்துக் கொண்டவன்" என்பது பொருள். சிவன் என்னும் சொல்லுக்கு "ஒன்று சேர்ந்தவன்" என்பது பொருள்.

இந்த மூவரும் ஒன்று சேர்ந்த நிலையைக் காட்டுவதே "எலி.'.பெண்டா" குகையில் முத்தலைகளோடு கூடிய "மும்மூர்த்தி"யின் மார்பளவுச் சிலை; அது உருவமுடையது. அதன் உருவமற்ற உருவமே சிவலிங்கம்; அதனால் தான் சிவலிங்கத்தை அருவுருவம் என்கிறோம். சிவலிங்க உருவில் ஆவிடையாரின் வடபகுதி திருமாலை (கடலை)யும், தென்பகுதி பிரமனை (நிலத்தை)யும், நடுவில் உயர்ந்து நிற்கும் கந்தம் என்னும் தூண்பகுதி உருத்திரனை (சூரியனை)யும் குறிப்பனவாகும்.

## தவ நிலையில் சிவன்

நிலத்தையும் கடலையும் நெடுவானத்துச் சூரியனையும் ஆராய்ந்து மனம் வானவெளியில் "இல்நுழை கதிரின் துன்னணு புரைய நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்த" அண்டங்களைக் கண்டது. இவற்றையெல்லாம் தோற்றி, காத்து, அழிக்கும் முத்தொழிலும் விசும்பிடத்து இருப்பதை அறிஞர் கண்டனர். அதனால் விசும்பையே சிவனென வணங்கினர். இந்நிலையில் தான் சிவனை விசுவநாதன், விசுவேஸ்வரன், விசுவ(ா)மீத்திறன் (விசும்பு என்னும் மிக்க ஆற்றல் படைத்தவன்) என்றெல்லாம் பெயரிட்டு வழிபட்டனர்.

விசும்புக்கு இயக்கமில்லை, ஆகலின், அவனுக்குத் "தாழ்சடை பொலிந்த அருந்தவ" நிலை உருவத்தைத் தந்தனர். சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் "மகாயோகி"த் தோற்றம் இந் நிலையில் தோன்றியதே. அம் முத்திரைகளில் மூன்று முகங்களும், யோகநிலையில் அமர்வும், சுற்றிலும் மான், எருமை, காண்டாமிருகம் முதலிய உயிர்களும் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக நிலையில்தான் விசுவ(ா)மித்திறன் திரிசங்கு சுவர்க்கத்தைப் படைத்தான் என்னும் கதை எழுந்தது. இங்குத் "திரிசங்கு சுவர்க்கம்" என்பது திரிகின்ற கோடியினும் மேலான சங்கு என்னும் எண்ணிக்கை கொண்ட நட்சத்திரங்களைக் குறிக்கிறது. இயக்கமற்ற விசும்பில் தோன்றிய ஓர் இயக்கமே கோடிக் கணக்கான உலகங்களைப் படைத்தது என்கிறது பரிபாடல்.

## ஆடும் நிலையில் சிவன்

இயங்காத ஒன்று உயிர்களைப் படைக்கமுடியுமா?

உலகங்களின் இயக்கங்களே பருவ மாற்றத்தையும் அவற்றின் விளைவான மழை, வெப்ப தட்பங்களையும், அவற்றின் விளைவான உயிர்களையும் தோற்றுவித்தன. அவ் வியக்கத்தைக் காட்டவே யோக நிலையில் இருந்த சிவனை ஆடும் நிலைக்குக் கொணர்ந்தனர்.

ஆடும் நிலைச் சிவனது தோற்றத்தில் சில மாற்றங்களையும் செய்தனர். யோக நிலையில் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலையும் மூன்று முகங்களின் வாயிலாக வெளிப்படுத்தினர். ஆடும் நிலையிலோ முகத்தை ஒன்றேயாக்கி, கைகளை நான்காக மாற்றினர். படைத்தலைத் துடிக்கைக்கும், காத்தலை அபயக் கைக்கும், அழித்தலைச் சூரியனாகிய அங்கியை ஏந்திய கைக்கும் அமைத்தனர்; அவற்றோடு மறைத்தலையும் அருளலையும் எஞ்சிய ஒரு கைக்கும் ஒரு காலுக்கும் அமைத்தனர்.

## ஆடும் சிவனின் அமைப்பு

அண்டம் என்பது சூரியனையும் அதனை அண்டியுள்ள கோள்களையும் (Solar System of Sun family) குறிக்கும்.

நமது சூரியனைப் போலப் பல கோடி அண்டங்களைக் கொண்டது நமது பேரண்டம்.

நமது பேரண்டம் போலப் பல்லாயிரம் பேரண்டங்கள் வானில் உலவிக் கொண்டிருக்கின்றன; நடமாடிக் கொண்டிருக்கின்றன. அவை நடமாடும் அப் பேரம்பலத்தின் அமைப்பைக் காட்டுவதே தில்லையிலுள்ள சிற்றம்பலம். அதிலும் குறிப்பாக, நடராசர் சிலையின் அமைப்பு.

இனி, இவற்றை வானியல் உண்மைகளோடு பொருத்திக் காணலாம்.

நமது பேரண்டத்தில் பத்தாயிரம் கோடி நட்சத்திரங்கள் உள்ளன. அவை ஒரு மையத்தைச் சுற்றி இயங்கிக் கொண்டிருப்பதோடு, புறப்பகுதியில் விலகிக் கொண்டும் வருகின்றன. அதனால் ஒன்றற்கும் மற்றொன்றற்கும் இடையேயுள்ள இடைவெளி விரிந்து கொண்டும் உள்ளன. இவ்விடைவெளி விரிவைத்தான் "அகலிரு விசும்பு" எனச் சங்க இலக்கியங்கள் அடிக்கடி குறிப்பிடுகின்றன. இந்த இயக்கத்தைக் காட்டுவது தான் நடராசருடைய ஆடும் நிலை.

## இருள்வாசியின் அமைப்பு

ஆடும் சிவனைச் சுற்றிலும் அமைந்துள்ள வளைவுச் சுடரே "இருள்வாசி" இதன் இயல்பு அறியார் அதனைத் "திருவாசி" என்பர். இருள்வாசியில் காணப்படும் ஒளிச்சுடர்கள் (அனற் பிழம்புகள்) பிற பேரண்டங்களைக் குறிப்பனவாம். நம் பேரண்டத்தைப் பல ஆயிரம் பேரண்டங்கள் சூழ்ந்துள்ளன என்பதைப் குறிக்கவே இருள்வாசி அமைந்துள்ளது.

இதனை மற்றொரு வகையிலும் நம்மவர் குறித்தனர். எரியும் பல பேரண்டங்கள் என்னும் சுடுகாட்டின் இடையில்தான் - இடத்தில் தான் - நம் சிவன் ஆடிக் கொண்டிருக்கின்றான் என்றனர். ஆடும் சிவனையே "பாண்டரங்கள்" (பாண்டு - பழைய; அரங்கன் - அரங்கினை உடையவன், அரங்கில் நடிப்பவன்) என்றும், "பாண்டரங்கண்ணன்" (பாண்டு + அரங்கு + அண்ணன்) என்றும் வழங்கினோம்.

## மனைவியர்

சூரியனிடத்துக் காணும் சக்தியைப் பெண்ணாக்கி உருத்திரன் மனைவியாக்கினர் என்பதைத் தொடக்கத்தில் கூறினோம்.

நம் பேரண்டத்திலுள்ள பத்தாயிரம் கோடி நட்சத்திரங்களையும் இயக்கும் சக்தி சூரியனிடத்துக் காணப்படும் சக்தியைக் காட்டிலும் பரந்ததல்லவா? அனால் அச் சக்தியைப் "பராசக்தி" என்றனர். இப்பராசக்தியே ஆடும் நிலையிலுள்ள சிவனுக்கு மனைவியாவாள்.

இனி, நம் பேரண்டம் போலவே பல்லாயிரம் பேரண்டங்களையும் தோற்றுவித்து, அவற்றை முறையாக இயக்கும் மிக மிகப் பரந்ததும் தொன்மையானதுமான சக்தியை "ஆதி பராசக்தி" என்றனர். அவள் உலகங்களைத் தோற்றுவித்ததால் "உமை" என்றும், அகன்ற அண்டங்களுக்கு இறைவியானதால் "அகிலாண்டேசுவரி" என்றும், (விண்) மீன்களை ஆட்சி செய்வதால் "மீனாட்சி" என்றும், பரந்தவெளியில் அவளது ஆட்சி நடை பெறுவதால் "விசாலாட்சி", "காமாட்சி" என்றும் பெயர்களைப் பெற்றாள். இவளே விசும்பாகிய யோக நிலையில் உள்ள சிவனுக்கு மனைவியாவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முயலகன்

இவ்வாறு பரந்து விரிந்து சென்ற மனித அறிவு ஓர் எல்லைக்கு மேல் செல்ல முடியவில்லை. அவனது கற்பனை கூட அவ்வெல்லையை கடக்க முடியவில்லை. இந்த நிலையைத்தான் ஆடும் சிவனின் அடியில் மிதிபடும் முயலகனாக மனிதன் சித்திரித்தான்.

இறைவன் இயல்பை மனிதன் காண முயல்கின்றான்; அவனது முகமும் கண்ணும் மேல்நோக்கி முயல்கின்றன. இறைவனோ, "நீ என்னை முற்றிலும் அறிய முடியாது" என மனிதனைக் குப்புற வீழ்த்தி, மனிதனது தோல்வியைக் காட்டும் செயலாக அவனது முதுகில் தன் காலை ஊன்றி ஆடுகின்றான். மனிதன் முயல்கின்ற அகத்தையுடைய (முயலக) னாகவே உள்ளான். இறைவனோ மனிதனது மனத்திற்கு- வாக்கிற்கு - காயத்திற்கு- எட்டாமல் அப்பாற்பட்டவனாகவே விளங்குகின்றான்.

இவ்வாறு இந்தியக் கடவுள்களில் தலையாய கடவுளாகச் சிவன் விளங்கியதால்தான் அவனை "மகா தேவன்", "பெருந்தேவன்". "தேவதேவன்" என்றெல்லாம் பெயரிட்டழைத்தனர்.

இவ் விண்ணியல் அமைப்பே சிவநெறியின் செல்வம். இதனாலேயே நாயன்மார்களும் சித்தர்களும் சிவனைத் "தத்துவத் தெய்வம்" என்றனர். ஆன்றோர்கள் அமைத்த சிவவடிவின் உண்மையைத் தெரிந்து கொள்ள நிலநூல் அறிவும் வானநூல் அறிவும் வேண்டும் என்னும் தாயுமானவர்,

"பாரறியாது அண்டப் பரப்பறியாது உன்பெருமை
யாரறிவார்? நானோ அறிவேன், பராபரமே

என்றார்.

"வெட்ட வெளியினைச் சதமென்று இருப்போர்க்குப்
பட்டயம் ஏதுக்கடி? - குதம்பாய்!
பட்டயம் ஏதுக்கடி?"

என்று சித்தர்களும் வெட்ட வெளியினையே சிவனாக எண்ணினர். "சிதம்பர ரகசிய"மும் அதுதானே!

---

# சிவபிரானின் திருநடனங்கள்

சிவபிரான் ஆடியருளிய திரு நடனங்கள் பல.

கால்மாறியாடிய நடனம், பாண்டரங்கம், கொடுகொட்டி, சந்தியாநிருத்தம், சண்டதாண்டவம், வீரட்டகாசம், கௌரி தாண்டவம், ஆனந்த நடனம், அசபாவரத நடனம், மகா சங்கார நிருத்தம் ஆகியன அவற்றுள் தலை சிறந்தவை.

கால்மாறியாடுந் திரு நடனம் மதுரையில் நிகழ்வது. இது பாண்டிய மன்னன் வேண்டுகோளுக்கு இணங்கி நிகழ்ந்ததாகப் புராணம் கூறும்.

திரிபுரமெரிக்கப் புறப்பட்ட வேளை நிகழ்ந்தது பாண்டரங்கம். கொடுகொட்டி, திரிபுரதகனம் முடிந்ததும் நிகழ்ந்தது.

பாற்கடலில் நஞ்சுண்ட பின் நிகழ்ந்தது சந்தியா நிருத்தம். சண்டதாண்டவம் இறைவன் பயங்கர வடிவு கொண்டு பல வாத்தியங்கள் முழங்கக் காளியுடன் ஆலங்காட்டில் நிகழ்த்தியது.

கௌரி தாண்டவம் தாருகவனத்திலிருந்து திரும்பி நிகழ்ந்ததைக் கௌரிக்கு உணர்த்த ஆடியது.

முருகன் உணர்த்திய பிரணவப் பொருளைக் கேட்டதும் வீறு கொண்டு நகைக்கையில் ஆடியது வீரட்டகாச நடனம்.

ஆனந்த தாண்டவம் சிதம்பரத்தில் கனகசபையில் முயலகன் மீது நின்று ஆடிய திரு நடனம்.

இறைவன் நடராஜமூர்த்தியாக நடனமாடும் கோலம் பஞ்சாக்கர வடிவாக அமைந்திருப்பதனை நூல்கள் பலவாறு எடுத்துக் காட்டியுள்ளன.

திருவடி நகாரமாகும் மகரம், உதரம், சிகரம், தோள், முகம் வகரமாய் விளங்குகிறது. யகரம் முடியாய் அமைந்துள்ளது.

பிரணவம் திருவாசி, விட்டு நீங்காது அமைந்து நிற்கும் பிரணவத்துள் ஒளிவீசி நிற்பது பஞ்சாக்கரமேயாகும்.

இறைவன் திரு நடனம் ஐம்பெருந் தொழில்களைக் குறிப்பதாக நூல்கள் உரைக்கின்றன.

உடுக்கையினால் தோற்றத்தையும், அமைக்கும் அபய கரத்தினால் திதியையும், ஏந்தி நிற்கும் அக்கினியால் சங்காரத்தையும், ஊன்றிய காலால் திரோதானத்தையும், தூக்கிய பாதத்தால் முத்தியையும் குறிப்பிட்டு பஞ்சகிருத்திய நடனத்தினை உலகம் உய்ய வேண்டி அனவரதமும் இயற்றி இறைவன் எம்மை உய்வித்து நிற்கின்றான்.

பேராசிரியர்
-கா. கைலாசநாதக் குருக்களின்
"சைவத்திருக் கோவிற் கிரியை
நெறி" எனும் நூலிலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அல்லல் அறுத்து ஆனந்தம் தரும் ஞானக்களஞ்சியம் கந்தபுராணம்

உலக மக்களை உலுப்பிக் கொண்டிருந்த மகா பாரத யுத்தம் முடிவுற்றது. தருமபுத்திரர் அரசு செலுத்திக் கொண்டிருக்கிறார். பீமசேனன் விரைந்து ஓடி வருகின்றான்.

தருமர் பீமனை எதற்காக இவ்வாறு விரைந்து ஓடி வருகிறாய் என வினவுகிறார். கலியுகம் பிறந்து விட்டதாம் தருமம் சீர்குலைந்து அதர்மம் தலை தூக்கப் போகிறது என மக்கள் கலக்கமடைகின்றனர் என பீமன் சொல்ல; அதனை உன்னைப் பார்த்தாலே தெரிகிறதேயென தருமர் கூறினார்.

பீமன் திகைத்துப் போனான். அங்குமிங்கும் பார்த்தான். தன்னை நன்றாகப் பார்த்தான். தான் செருப்பணிந்திருப்பதை கண்டான்.

இத்தனை வருடங்களாகத் தமையன் முன் செருப்பணிந்திருக்கவில்லை. இன்று தன்னையறியாது இப்படி நடந்து போயிற்றே என பீமன் கவலையடைந்தான். மன்னிப்புக் கோரினான்.

பின்னர் தருமம் சீர்குலையாமல் மக்கள் அறவழியை நாட வழிவகைகளை ஆராய்ந்தனர். பஞ்ச பாண்டவர்களும், தவ சீலர்களும், முனிவர்களும் வியாசபெருமானிடம் சென்று தங்கள் குறையை முறையிட்டனர்.

## ஸ்காந்த புராணம்

வியாசப் பெருமான் அதிகம் சிந்தித்தார். தருமத்தை நிலை நாட்டவும் மக்கள் தங்கள் பாவங்களிலிருந்து விடுபடுவதற்கும் ஸ்காந்த புராணம் ஒன்றே சிறந்தது என்று சொன்னார்.

"ஸ்கந்தஸ்ய கீர்த்திம் அதுலாம் கலிகல்மஷ நாசி நீம்" எனக் கூறி ஸ்காந்தபுராணத்தை நான்கு லட்சம் கிரந்தங்களால் யாத்துக் கொடுத்தார்.

ஸ்காந்தபுராணம் சனற்குமாரசம்கிதை, சூத சம்கிதை, பிரம்ம சம்கிதை, விட்ணு சம்கிதை, சங்கரசம்கிதை, சூரிய சம்கிதை என ஆறு சம்கிதைகளைக் கொண்டது.

இவற்றுள் சங்கர சம்கிதை பன்னிரண்டு கண்டங்களாலானவை. கண்டங்கள் காசி கண்டம், காளிகா கண்டம், குமார உற்பவ கண்டம் முதலியன.

குமார உற்பவ கண்டம் ஒன்றே கச்சியப்ப சுவாமிகளால் செந்தமிழில் பாடித்தந்த கந்தபுராணமாகும்.

கந்தபுராணம் ஞானக் களஞ்சியம். கருணாமூர்த்தியாகிய கந்தக் கடவுளின் அருமை, பெருமை, அருள், புகழ் ஆகியனவற்றைக் கூறுவதாகும். சூரபத்மன் தேவர்களைச் சிறையிலிட்டு இடுக்கண் செய்த பொழுது அவனது ஆற்றலை வற்றச் செய்து தேவர்களை விடுவித்த வரலாற்றைக் கூறுவது.

இப்புராணத்தில் 10,345 செய்யுள்கள் உள்ளன. கந்தபுராணம் ஆறு காண்டங்களானது. அவைகள் முறையே உற்பவ காண்டம், அசுர காண்டம், மகேந்திர காண்டம், யுத்த காண்டம், தேவ காண்டம், தட்ச காண்டமென்பன.

உபதேச காண்டமென ஏழாவது காண்டமென ஒன்றும் குகனேரியப்ப முதலியாரும் ஞானவரோதயரும் செய்தனர் என அறியக் கிடக்கிறது.

ஆரைம்பதி க. இராசரத்தினம்

"எம்பெரு மான்இறை வாமுறையோ-வென்று
வம்பவிழ் வானோர் அசுரன் வலிசொல்ல
அம்பவள மேனி அறுமுகன் போயவர்
தம்பகை கொல்லென்ற தற்பரன் தானே.

-திருமந்திரம்-

சூரபத்மன் ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்கள் அரசாளும் ஆற்றலையும் வச்சிர தேகத்தையும் வேறு பல வரங்களையும் சிவபிரானிடமிருந்து பெற்றுக் கொண்டவன்.

இருந்தும் சிவபிரானின் மகனுடன் பகை கொண்டு அவனுடன் போர் தொடுத்தான். சிவபிரானின் நன்றியை மறந்தான். நன்றி கொன்றவனாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நடந்ததன் பயனாக அந்நன்றி கொன்ற தன்மையே அவனை ஈற்றில் அழித்து விடுகிறது.*

*"ஒன்றொரு பயன்தனை உதவினோர் மனம்*
*கன்றிட ஒருவினை கருதிச் செய்வரேல்*
*புன்தொழில் அவர்க்குமுன் புரிந்த நன்றியே*
*கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ?"*

-கந்தபுராணம்-

*மாயை, கன்மம், ஆணவம் ஆகிய மலங்களின் உருவங்களான தாரகன், சிங்கன், சூரன் ஆகியோர் தேவர்களைச் சிறையிலடைத்தனர். அவர்களைத் தகாத தொழில்களைச் செய்யுமாறு பணித்தனர். சொல்லவொண்ணாத் துன்பங்கள் அத்தனையும் செய்தனர். கருணாமூர்த்தியாய கந்தக் கடவுள் அவர்களுடன் போர் தொடுத்து அவர்களின் ஆற்றலை அழித்தார். அவர்களைத் தூயவர்களாக மாற்றினார்.*

*மாயாமலத்தினின்றும் விடுபட்டதாரகன் ஐயனாருக்கு யானை வாகனமாகினான். கன்மலத்தினின்றும் நீங்கிய சிங்கன் அம்பிகைக்குச் சிங்க வாகனமானான் என்பன புராணங்கள்.*

*ஆணவமலத்தினின்று விலகிய பசுவாகிய சூரபத்மன் என்னும் ஆன்மா பதியாகிய முருகப் பெருமானுக்கு மயில் வாகனமாகவும் சேவற்கொடியாகவும் நின்று பணிபுரியலானான்.*

*"தீயவை புரிந்தாரேனும் குமரவேள் திருமுன்னுற்றால்*
*தூயவராகி மேலைத் தொல்கதி யடைவர் என்கை*
*ஆயவும் வேண்டுங் கொல்லோ? அடுசமர் இந்நாள் செய்த*
*மயையின் மகனுமன்றோ வரம்பிலா அருள் பெற்றுயர்ந் தான்*

*நாமும் கந்தபுராணத்தைப் பாராயணம் செய்து அவ்வழி நின்று அல்லலறுத்து ஆனந்தமடைவோம்.*

---

## சிவலிங்க வழிபாடு செய்த சிலந்தி
## 63 நாயன்மார்களில் ஒருவர்

### நாயன்மார் வரலாறு

சோழ நாட்டில், சந்திரதீர்த்தத்தின் அருகிலே ஒருவனம் இருந்தது. அங்கு நின்ற ஒருவெண் நாவல் மரத்தின் கீழே ஒரு சிவலிங்கம் வெளிப்பட்டது.

அச்சிவலிங்கத்தை வெள்ளை யானை ஒன்று கண்டது. அந்த யானை நாள்தோறும் புழைக்கையினாலே தீர்த்தம் முகந்து சிவலிங்கத்தின் மேல் தெளித்து மலர்களைச் சாத்தி வழிபட்டு வந்தது. அதனால் அந்த ஸ்தலத்துக்கு திருவானைக்கா என்று பெயராயிற்று.

அறிவுடையதான ஒரு சிலந்தி, அந்தச் சிவலிங்கத்தின் மேலே சருகு உதிராவண்ணம், தன் வாய்நூலினாலே மேற்கட்டி செய்தது.

சிவலிங்கத்தை வணங்க வந்த யானை அதனைக் கண்டு ஆத்திரமடைந்தது. சிலந்தியின் வலையை அது சிதைத்தது. சிலந்தி அது கண்டு கவலையடைந்தது.

"எம்பெருமான் மேல் சருகு உதிரா வண்ணம் நான் வருந்திச் செய்த மேற்கட்டியை இது அழிக்கலாமா? இப்படி சிலந்தி கடிந்து கொண்டது.

ஆத்திரத்தில் சிலந்தி வெள்ளானையின் புழைக்கையினுள்ளே புகுந்து கடித்தது. கடியைத் தாங்க முடியாமல் வெள்ளானை கையை நிலத்திலே மோதிக் கொண்டு விழுந்து இறந்தது. அப்போது யானையின் புழைக்கையினுள்ளே புகுந்த சிலந்தியும் இறந்து போனது.

பின்னர் வெள்ளானை சிவகணநாதராகித் திருக்கைலாசமலை சென்று சிவபெருமானைச் சேவித்துக் கொண்டிருந்தது.

சுபதேவன் என்ற சோழமகாராஜா புத்திரபாக்கியமின்றி வருந்தினான். ஒருநாள் மனைவி கமலாவதியுடன் சிதம்பரம் சென்று இறைவனை வழிபட்டு வந்தார். இறைவன் திருவருளினால் அந்தச் சிலந்தி கமலாவதியின் வயிற்றிலே மகவாய் வந்தடைந்தது. கமலாவதிக்குப் பிரசவ காலம் வந்தது. மன்னன் சோதிடர்களை அழைத்துக் கலந்தாலோசித்தான் "இந்தப்பிள்ளை ஒரு நாழிகை கழித்துப் பிறக்குமாகில் முப்புவனங்களையும் அரசாளும் என்று சோதிடர்கள் கூறினார்கள்.

"என் பிள்ளை இப்போது பிறவாமல் ஒரு நாழிகை கழித்துப் பிறக்கும்படி என்னைத் தலைகீழாகக் கட்டித் தூக்குங்கள்" என்று கமலாவதி கேட்டுக் கொண்டாள். அதன்படி செய்யப்பட்டது. சோதிடர்கள் குறித்த நேரத்தில் கமலாவதி பிரசவித்தாள். காலம் தாழ்த்தி பிறந்தமையால் குழந்தையின் கண்கள் சிவந்திருந்தன. அதனைக் கண்ட கமலாவதி "என் கோச்செங்கண்ணனோ" என்று சொல்லிக் கொண்டு உயிரை விட்டாள்.

சுபதேவ மன்னன் அப்புதல்வனை வளர்த்து முடிசூட்டி, அரசை அவனிடம் ஒப்படைத்துவிட்டு, தான் தவஞ்செய்து சிவலோகத்தை அடைந்தான்.

கோச்செங்கட்சோழநாயனார் பரமசிவனது திருவருளினாலே பூர்வ ஜென்மவுணர்ச்சியோடு பிறந்து, சைவத்திருநெறி தழைக்க ஆட்சி நடத்தினார். அக்காலத்தில் சிவாலயங்கள் பலவற்றைக் கட்டுவித்தார்.

திருவானைக்காவிலே தான் முன்பு அருள்பெற்றதை அவர் அறிந்தார். அங்கே வெண்நாவலுடன் பரமசிவனுக்குத் திருக்கோயில் கட்டுவித்தார்.

அமைச்சர்களை ஏவி, சோழநாட்டில் வெவ்வேறிடங்களில் சிவாலயங்கள் கட்டுவித்தார்.

பின்பு சிதம்பரம் சென்றார். அங்கு சபாநாயகரைத் தரிசித்து வணங்கி தில்லை வாழந்தணர்களுக்கு திருமாளிகைகளைக் கட்டுவித்து வழங்கினார்.

பின்னும் பல திருத்தொண்டுகளைச் செய்த அவர் சபாநாயகருடைய திருவடி நிழலை அடைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமைச்சரின் ஆசையை நிறைவேற்றிய சோழர் மன்னன்

பல காலமாகச் சேக்கிழாருக்குத் தொண்டர் வரலாற்றைக் காவியமாகப் பாடவேண்டும் என்று ஆசை ஆனால் அமைச்சராக இருக்கும் போது அரசியலில் ஈடுபடும் கடமை உடையவராதலின் அமைதியாக இருந்து அப்படிச் செய்ய இயலவில்லை.

தலங்களுக்கு அடிக்கடி சென்று வரும் வழக்கம் உடையவர் சேக்கிழார் பெருமான். அதனால் அங்காங்கே நாயன்மார்களைப் பற்றி வழங்கும் வரலாறுகளை எல்லாம் தக்கவர்கள் வாயிலாகக் கேட்டுத் தெரிந்து கொண்டிருந்தார்.

இராசராசசோழன் காலத்திலிருந்தே எங்கும் தேவாரபாராயணம் மிகுதியாயிற்று. தலங்களுக்குப் பெருமதிப்பு உண்டாயிற்று.

**வித்துவான் கி. வா. ஜகந்நாதன்**

நாயன்மார்களிடம் பக்தி வளர்ந்து வந்தது. பதினொரு சைவத் திருமுறைகளைத் தமிழ் மக்கள் ஆர்வத்துடன் ஓதியும் பயின்றும் இன்புற்றார்கள்.

சோழமன்னர்களும் அவர்கள் குடும்பத்தினரும் தலங்களில் பலபல திருத்தொண்டுகள் இயற்றி வந்தனர்.

இந்த அருமையான காலத்தில் வாழ்ந்த சேக்கிழாருக்குத் திருத்தொண்டர் வரலாற்றைப் பாடவேண்டும் என்ற ஆர்வம் எழுந்தது வியப்பன்று.

## குலோத்துங்க சோழன்

அக்காலத்தில் வாழ்ந்த குலோத்துங்க சோழன் தமிழ்ப்பழங் காப்பியங்களில் விருப்பமுடையவனாகிப் படித்து வந்தான். சீவக சிந்தாமணியில் அவன் உள்ளம் தேங்கியது.

பரம சைவனானாலும் தமிழுக்காக அதைப் படித்தபோது, சைவசமயம் சம்பந்தமாக இப்படி ஒரு காப்பியம் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்ற எண்ணம் அவனுக்குத் தோன்றியது. அந்த எண்ணத்தைத் தான் அமைச்சராகிய சேக்கிழாரிடம் வெளியிட்டார்.

இறைவன் திருவருளே இந்தக் கருத்தை மன்னனுக்கு உண்டாக்கியதென்று நினைந்து உவந்தார் அமைச்சர்பிரான். அவருடைய ஆவலும் அது தானே.

"புதிதாகவே ஒரு காவியம் இயற்றலாம். இறைவன் திருவருள் துணை செய்யும்" என்றார் சேக்கிழார்.

"யார் இயற்றுவது?" என்று கேட்டான் மன்னன்

"அடியேனே பாடுகிறேன். நெடுநாட்களாக அடியேனுக்கு அந்த எண்ணம் உண்டு. அதைச் செயலில் நிறைவேற்றப் போதிய ஓய்வு இல்லை. அது ஒன்று தான் தடை. இப்போது, மன்னர் பெருமானுக்கும் அத்தகைய காவியம் ஒன்று வரவேண்டும். என்ற ஆர்வம் இருப்பது தெரிந்து அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன்."

"அப்படியா! இதுவரையில் நீங்கள் இதைச் சொல்லவில்லையே! எவ்வகையான காவியம் இயற்றலாம் என்று எண்ணுகிறீர்கள்?"

"இறைவன் பெருமையை உலகுக்குத் தெளிவாக்குகிறவர்கள் அடியவர்களே. சிவனடியார்களுடைய வரலாற்றையே காவியமாகப் பாடலாம் என்பது என் எண்ணம்".

மிகவும் சிறப்பான செயல்; பெரிய புண்ணியமான காரியம். அந்த வரலாறுகளுக்கு ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றனவா?"

"சுந்தரமூர்த்திநாயனார் திருவாய் மலர்ந்தருளியிருக்கும் திருத்தொண்டத் தொகைதான் மூல ஆதாரம். பின்பு நம்பியாண்டார் நம்பிகள் அதை அடியொற்றிப் பாடிய திருத்தொண்டர் திருவந்தாதி இருக்கிறது. மூவர் முதலிகளுடைய வரலாற்றுக்குத் தேவாரத்திலிருந்து கிடைக்கும் பல செய்திகள் உபகாரமாக இருக்கும். இவற்றையல்லாமல் அங்கங்கே தலங்களுக்குச் சென்றபோது விசாரித்துப் பல செய்திகளை அறிந்து கொண்டிருக்கிறேன். பாடத் தொடங்குவதானால் இன்னும் சில தலங்களுக்குச் சென்றுவர வேண்டும்".

"நீங்கள் அவசியம் அந்தக் காவியத்தைப் பாடிவிடுங்கள். மற்றக் கவலை ஒன்றும் உங்களுக்கு வேண்டாம். காவியம் பாடி நிறைவேறு மட்டும் அரசியல் நினைவே வேண்டாம். இங்கே இருந்து பாடுகிறீர்களா? குன்றத்தூருக்குச் சென்று பாடுகிறீர்களா? எங்கே இருந்தாலும் வேண்டிய வசதிகள் எல்லாம் கிடைக்க ஏற்பாடு செய்யலாம்".

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தில்லையில்**

மன்னன் இவ்வாறு கூறவே, திருவருள் கூட்டு வித்தால் எதுவும் இனிதே நிறைவேறும் என்ற உறுதி சேக்கிழாருக்கு உண்டாயிற்று. "தில்லையில் இருந்து திருச்சிற்றம்பலவனுடைய தரிசனத்தைச் செய்து கொண்டே பாடலாம் என்பது என் எண்ணம்" என்று தம் கருத்தைச் சொன்னார்.

அப்படி ஒரு காவியம் பாடினால் தமிழ் நாட்டுக்கே சிறப்பையளிக்கும் என்று சோழ மன்னன் நம்பினான். ஆகவே ஒருநாள் பார்த்துத் திருத்தொண்டர் புராணத்தைத் தொடங்கவேண்டும் என்று நிச்சய மாயிற்று.

சேக்கிழார், அமைச்சர் திருக்கோலத்தை விடுத்துத் திருநீறும் கண்டிகையும் திருமேனியெங்கும் அணிந்து கொண்டார். சிற்றம்பலவன் திருவருளால் இந்தப்பெரும் பாக்கியம் தமக்குக் கிடைத்ததை எண்ணி உருகினார். சிதம்பரத்துக்கு வந்து ஆனந்தத் தாண்டவ மூர்த்தியைக் கண்குளிரத் தரிசித்துக் கொண்டார். ஓர் அழகிய திருமாளிகையில் தங்கித் தொண்டர் புராணத்தை இயற்ற நினைந்தார். சிதம்பரேசன் சந்நிதியில் தொடங்க எண்ணி அபிஷேக ஆராதனைகள் செய்யச் சொல்லித் திருநீற்றுப் பிரசாதம் வாங்கி அணிந்து இறைவனை மனமுருகி வேண்டிக் கொண்டார். ஏடும் எழுத்தாணியுமாகக் கற்றுச் சொல்லிகள் உடன் அமர்ந்திருந்தார்கள்.

சிவ நேசச் செல்வர்கள் அற்புதக் காவியத்தின் பிறப்பைக் கண்டுகளிக்கக் கூடியிருந்தார்கள்.

**உலகெலாம்**

"எப்படித் தொடங்குவது?" என்ற சிந்தனையில் சூழ்ந்திருந்தார் சேக்கிழார். இறைவனுடைய திருவருள் தமக்கு வழிகாட்டும் என்ற நம்பிக்கையோடு அவர் உண்முகப் பார்வையில் ஈடுபட்டிருந்தார். அப்போது அசரீரியாக அவர் காதில் "உலகெலாம்" என்ற தொடர் விழுந்தது. அதே சமயம் அந்தப் புற ஒலியின் எதிரொலி போல அகத்தே "உணர்ந்து ஓதற்கரியவன்" என்ற தொடர் உதயமாயிற்று.

இரண்டும் சேர்ந்து "உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்" என்ற அடியாக இணைந்தன.

இப்போது சேக்கிழாருக்குப் புதிய ஊக்கம் உண்டாயிற்று. தாம் மேற்கொண்ட காப்பியப் படைப்புக்கு இறைவனுடைய அருளாணை கிடைத்து விட்டது என்று பெருமிதம் கொண்டார். அப்பால் அந்த அடி விரிந்து முதற்பாட்டாக மலர்ந்தது.

உலகெலாம் உணர்ந்து ஓதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

தில்லைச் சிற்றம்பலத்தில் நடமாடும் சிலம்புச் சீறடியை வாழ்த்தி வணங்கித் தொடங்கிய பெரிய புராணம் மிகச் சிறப்பாக நிறைவேறியது.

தெய்வத் திருவருட் சின்னமாகக் கிடைத்த "உலகெலாம்" என்ற தொடரைச் சேக்கிழார் பெரிய புராணத்தின் தொடக்கத்தில் வைத்ததோடன்றி இடையிலும் ஈற்றுச் செய்யுளிலும் வைத்துப் போற்றியிருக்கிறார்.

திருஞானசம்பந்தப்பெருமான் சிவபெருமான் திருவருளால் கிடைத்த முத்துச் சிவிகையில் ஏறியருளினார் என்ற செய்தியைச் சொல்லும் பாட்டில் "உலகெலாம்" என்ற தொடர் நிற்கிறது.

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்துவெண் ணீற்றொளி போற்றி நின்று
ஆதி - யார்அரு ளாதலின் அஞ்செழுத்
தோதி ஏறினார் உய்ய உலகெலாம்

இது நூலின் இடையில் வைத்தது.

பெரிய புராணத்தின் கடைசிச் சுருக்கமாகிய வெள்ளானைச் சுருக்கத்தின் இறுதிப் பாட்டு வருமாறு:

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித் துள்ளமும் ஓங்கிட
மன்று ளார்அடி யாரவர் வான்புகழ்
நின்ற தொங்கும் நிலவி உலகெலாம்.

இது நூலின் கடைசியில் வைத்தது. இவ்வாறு தோற்றம், நடு, இறுதி என்னும் மூன்றிடத்திலும் அசரீரி வாக்காகத் தோன்றிய தொடரை அழைத்து நிறைவேற்றிய பெரிய புராணம் சைவத் திருமுறைகள் பதினொன்றோடு சேர்ந்து பன்னிரண்டாவது திருமுறையாக விளங்குகிறது.

**அறிவிப்பு**

*தவிர்க்க முடியாத காரணங்களினால் "சிவநெறி"யின் இந்த இதழ் ஆடிமுதல் மார்கழி மாதம் வரையான காலப்பகுதிக்கான இதழாக வெளிவருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்தில் சைவம் காத்த பெரியார் ஆறுமுகநாவலர்

பல்கலைப்புலவர்
க. சி. குலரத்தினம்

நல்லை நகர் ஆறுமுகநாவலர் பெருமான் தமிழுக்கு சைவ சமயத்திற்கும் சமூகத்துக்கும் நாட்டுக்கும் செய்த நற்பணிகள் சொல்லில் அடங்கா. இவற்றைக் கல்விப்பணி, சமூகப்பணி, திருக்கோயிற் பணி என்ற தலைப்புக்களில் அடக்கிக் கொள்ளலாம்.

## கல்விப் பணி

சைவமும் தமிழும் நல்ல முறையில் வளர வேண்டும் என்பதற்காக வண்ணார் பண்ணை, கோப்பாய், சிதம்பரம் முதலிய இடங்களில் சைவ வித்தியாசாலைகளை ஆரம்பித்தார். பாடசாலையில் போதிப்பதற்குத் தரமான ஆசிரியர்களை உருவாக்கினார்.

தாமே பல விதப்பட்ட பாட நூல்களையும் கருவி நூல்களையும் எழுதினார். நூல்களைப் பிழையறப்பதிப்பதற்குத் தாமே அச்சகத்தை நிறுவினார். தரமான நூல்களுக்கு உரை எழுதி வெளியிட்டார். ஏட்டிலிருந்த பழைய நூல்களை ஆராய்ந்து சுத்தப்பதிப்பாக வெளியிட்டார். நல்ல வசன நடையில் எழுதிப்பிறரையும் எழுதப்பழக்கினார். அதனால் தமிழ் நாட்டுக் கல்வி மான்களும் அவரை வசன நடை கைவந்த வல்லாளன் எனப் போற்றினார்கள்.

## சமூகப் பணி

தமிழர் நாகரிகத்தை நிலைக்கச் செய்ய முயன்ற ஆறுமுகநாவலர் பெருமானின் பணிகள் சமூகத்தை அடிப்படையாகக் கொண்டதாகும்.

ஏழைப்பிள்ளைகள் இலவசமாகக் கல்வி கற்பதற்கு அவர் வழி செய்தார். ஆதரவற்ற பிள்ளைகளுக்கு உடையும், உறைவிடமும் அளித்துக்காக்கும் வகை செய்தார் அன்னதானம் செய்தல் பசுவளர்த்தல், மரம் நடுதல், தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், மடங்கள் கட்டுதல், நல்லறிவு போதித்தல், கிராமத்துக் கைத் தொழிலை விருத்தி செய்தல் முதலிய சேவைகளை ஊக்குவித்தார்.

## திருக்கோயிற்பணி

16, 17 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பியர் வருகையால் சைவ மக்களின் நிலை பாதிக்கப்பட்டது. அந்த வேளையில் நாவலர் பெருமான் சைவ வாழ்வுக்காகப் பெரிதும் உழைத்து பழைய சைவ மரபுகளை நிலைநாட்டினார்.

போர்த்துக்கேயர் இடித்தழித்த சைவக் கோயில்களைத் திருத்திப் புனருத்தாரணஞ் செய்து கும்பாபிஷேகம் மற்றும் நித்திய நைமித்திய பூசைகளை ஒழுங்காகச் செய்ய வழிவகுத்தார். கோயில்களில் உயிர்ப்பலி இடம் பெறுவதைத் தடுத்தார். புதிய கோயில்களைக் கட்டுவதிலும் பார்க்க பழைய கோயில்களைக் திருத்துதலே முறையான செயலும் சேவையும் என்று வலியுறுத்தினார். அதனால் நாவலரை ""சைவப்பயிரை வளர்க்க வந்த சொல்லாறு"" என்றும் சிவநேசச் செல்வர் என்றும் திருவுடைத் தொண்டர் என்றும் சித்தாந்தப் பெருஞ் செல்வன் என்றும் பெரியோர்கள் வாழ்த்தினர்.

### மனதிலே

### அமைதி, இன்பம் பெருக...

அழுக்காறாவது பிறருடைய கல்வி, செல்வம் முதலியவற்றைக் கண்டு பொறாமையாகும். பொறாமையுடையவன் தன்னுடைய துன்பத்துக்குத் தானே காரணனாகின்றான்.

அக்கினியினாலே பஞ்சு எரிவது போலப் பொறாமையினாலே மனம் எரிகின்றது. ஆதலினாலே பொறாமையுடையவனுக்குக் கேடு விளைவித்தற்கு வேறு பகைவர் வேண்டாம். அப்பொறாமை ஒன்றே போதும்.

பொறாமையுடையவனுடைய மனதிலே ஒரு போதும் இன்பமும் அமைவும் உண்டாகா. பொறாமையாகிய தீக்குணம் மனிதருக்கு இயல்பாகும். அது தோன்றும்பொழுதே அறிவாகிய கருவியினால் அதைக் களைந்துவிடல் வேண்டும். களைந்து விட்டால் அவன் மனதிலே துன்பம் நீங்க இன்பம் விளையும்.

பொறாமையுடையவனிடத்தே சீதேவி நீங்க, மூதேவி குடிபுகுவாள். பொறாமையானது தன்னையுடையவருக்கு இம்மையிலே செல்வத்தையும் புகழையும் கெடுத்து, எல்லாப் பாவங்களையும் விளைவித்து அவனை மறுமையிலே நரகத்திற்கு செலுத்தி விடும்.

**- ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான்**

எழுதிய பாலபாடத்தில் இருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறிக்கு எமது வாழ்த்துக்கள்

# ரோயல் கொன்ஸ்ட்ரக்ஷன் அன்ட்
# ரோயல் சென்டர்

V

**166, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை.**

கட்டட நிர்மாண ஒப்பந்தக்காரர், கட்டடப்பொருட்கள் விற்பனையும் விநியோகமும்

**Contractors of Building Construction, Suppliers of Building Materials and Agents for General Transport**

# ROYAL CONSTRUCTION AND ROYAL CENTRE

166, Thirugnanasampanthar Street,
Trincomalee.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவன் திருவருள் பாடும் திருவெம்பாவை

சிவபெருமானுக்குரிய விரத தினங்களில் திருவாதிரை நாளும் ஒன்று. சிவபெருமானை ஆதிரையான் என்பர்.

விண்வெளியில் உள்ள ஆதிரை நட்சத்திரம் சூரியனிலும் பார்க்கப் பெரியது. மிகப் பழைய காலத்தில் தமிழர் கணித்த வண்ணம் தைப் பூசம், மாசி மகம், பங்குனி உத்திரம், சித்திரைச் சித்திரை முதலியன சிறந்த நாள்கள்.

இங்ஙனமே கார்த்திகைக் கார்த்திகையும், மார்கழித் திருவாதிரையும் மிகவும் புனிதமான நாள்கள்.

திருவாதிரை சிவபெருமானுக்குரிய நாள். அதிலும் மார்கழி மாதத்தில் அது பூரணை நாளில் வரும்போது மிகவும் புனிதமாகிறது. அன்று சிவபெருமானுக்கு பெரு விழாவெடுப்பார்கள். திருவாதிரையை உள்ளிட்ட திருவெம்பாவைக் காலம் சிறப்பான காலம்.

திருவெம்பாவை மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகத்தில் உள்ள ஒரு பதிகமாகும். இதில் 20 பாடல்கள் உள்ளன. இது திருவண்ணாமலை எனும் திருத்தலத்தில் பாடப்பெற்றதாகும். ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் எம்பாவாய் என வருதலால் இப்பதிகம் திருவெம்பாவை எனப் பெயர் பெற்றது.

பக்குவம் முதிர்ந்த ஆன்மா, பக்குவம் பெறாமல் மலவிருளில் அழுந்திக் கிடக்கும் ஆன்மாவை எழுப்பி இறைவன் திருவருளில் திளைக்க வைப்பதற்கு அழைப்பதாகப் பெரியோர் பொருள்கொள்வர்.

உலக சிருஷ்டியில் மனோன்மணி, சர்வ பூத மணி, பலப்பிரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை என்னும் ஒன்பது சக்திகள் முன்னையது பின்னையதை முறையாகத் துயில் எழுப்புவதாகப் பாடல்கள் அமைந்துள்ளன.

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கு மிலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருஞ் சேவகனை
அங்க ணரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்

விளக்கம்: சிவபெருமான் நாம் உய்யும் வண்ணம் தமது திருவடி இன்பத்தைத் தாமே எழுந்தருளி வந்து எமக்குத் தந்தருளுகின்றார்.

## தரிசனம்

திருவண்ணாமலை, ஞானபூமி. தமிழகத்தில் பெரும்புகழுடன் விளங்கும் மலைத்தலம் இது.

அங்குள்ள அருணசலேசுவரர் ஆலயம், தமிழகத்தில் உள்ள மிகப்பெரிய கோயில்களுள் ஒன்று.

பஞ்சபூதத் தலங்களுள் ஒன்று இது. இத்தலம் நினைக்க முத்தியளிப்பது.

பிரமனும், விஷ்ணுவும் "யான்பரம்" "யான்பரம்" என்று வாதிட்டனர். அவர்கள் முன் சிவபெருமான் அக்கினி மலையாகத் தோன்றினார்.

பிரமன் அன்னமாகவும் விஷ்ணு பன்றியாகவும் உருவெடுத்து எம்பெருமானின் முடியையும் அடியையும் தேடினார்கள். அவர்களால் காணமுடியவில்லை.

பிரமனும் விஷ்ணுவும் திகைத்துப்போய் நின்றனர். அப்போது தாமே பரம்பொருள் என்னும் உண்மையை எம்பெருமான் இருவருக்கும் உணர்த்திய திருத்தலம் இது.

இதனை உலகுக்கு உணர்த்தும் வகையிலேயே கார்த்திகை மாதக் கிருத்திகையில் சிறப்பு மிக்க தீபதரிசன விழா நடைபெற்று வருகிறது. இது "அண்ணாமலை தீபம்" என்றழைக்கப்படுகிறது.

இங்கு கோயில் கொண்டுள்ள இறைவன் திருப்பெயர் அருணாசலேஸ்வரர். இப்பெருமானுக்கு அண்ணாமலையார் என்னும் திருப்பெயரும் உண்டு. அம்பிகை உண்ணாமலையம்மை.

பார்வதிதேவியார் தவம் புரிந்து சிவபெருமானுடைய இடப்பாகம் பெற்ற தலம் இது.

திருக்கோயில் அண்ணாமலையின் அடிவாரத்தில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ளது.

நான்கு பக்கங்களிலும் மிகப் பெரிய நான்கு கோபுரங்களுடன், ஐந்து பிரகாரங்களுடனும் அமைந்த மிகப் பெரிய கோயில்.

கிழக்குக் கோபுர வாயிலைக் கடந்தால் முதலில் காட்சி தருவது கம்பத்திளையனார் என்னும் முருகன் சந்நிதி. இதில் முருகப்பெருமான் வில் ஏந்தி மயில் மீது காலூன்றி அழகே உருவாகக் காட்சி தருகிறார்.

ஐந்தாம் பிரகாரத்தின் வடகிழக்குக் கோடியில் ஆயிரங்கால் மண்டபமும் அதன் எதிரில் சிவகங்கைத் தீர்த்தமும் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தம்பலகமம் ஆதி கோணேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற குடிநீர் வழங்கல் ஆரம்ப வைபவத்தை ஒட்டிய கூட்டத்தில் யு. என். எச். சி. ஆர். திருக்கோணமலைத் திட்ட இணைப்பாளர் **செல்வி. ரேசி பக்கன்மேயர்** சிறப்புரை ஆற்றுகிறார்.



குழாய் நீர்த்திட்ட நீர் விநியோக ஆரம்ப வைபவத்தை மருத்துவமனை நுழை வாயிலில் உள்ள குழாயில் நிறைச்செம்பில் ஏந்தி **செல்வி. ரேசி பக்கன்மேயர்** ஆரம்பித்து வைக்கின்றார். அருகில் மகிழ்ச்சிப்பிரவாகத்தில் கரங்களைத் தட்டு பவர் தம்பலகமம் இ. இ. மன்றத் தலைவர் **திரு. சு. பாஸ்கரலிங்கம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூதூர்ப் பிராந்தியத்தில் உள்ள அல்லை இடதுகரை 03 (இலிங்கபுரம்) கிராமத்தில் இந்து இளைஞர் மன்றக்கட்டடம் ஒன்று பேரவையால் அமைக்கப்படுகிறது. இந்த அடிக்கல் நடும் வைபவத்திற்கு செல்வதற்காக இறைபணிச் செம்மல் **திரு. பொ. கந்தையா, பண்டிதர் திரு. அ. ஆறுமுகம்** ஆகியோர் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளருடன் மூதூர் இறங்குதுறையில் காணப்படுகின்றனர்.



இலிங்கபுரம் இ. இ. மன்றத்துக்கான அடிக்கல்லை இறைபணிச் செம்மல் **திரு. பொ. கந்தையா** அவர்கள் **(காந்தீயப் பெரியார்)** நடுவதற்கு ஆரம்பமாவதைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்வாழ்வு வாழ வழிகாட்டும் வள்ளுவம்

*சேற்று நிலம் காலை வைக்கிறான். வழுக்குகிறது.*

*நடந்தால் தான் போய்த் தண்ணீர் பாய்ச்ச முடியும்.*

*வரப்பிலே கால் வைக்கிறான். வழுக்கி விடுகிறது.*

*அப்போது ஒரு வயது சென்ற கிழவன் ஒரு தடியைக் கொடுத்து 'அடேய் ஊன்றிக் கொண்டு போ' என்றான்.*

*தடியை வாங்கிக் கொண்டு ஊன்றினான்; நடந்து விட்டான்.*

*சேற்று நிலத்திலே வழுக்கி வழுக்கி நடக்கிறவனுக்கு ஊன்று கோல் துணை செய்வது போல-*

*வாழ்க்கையிலே வழுக்கி வழுக்கி நடக்கிற ஆணுக்கும் பெண்ணுக்கும் குடும்பம் எப்படி? மாமியார் எப்படி? மாமனார் எப்படி? பொது மக்கள் எப்படி? குடும்பம் நடாத்துவது எப்படி? என்ற ஐயப்பாடு வந்தால் ஒழுக்கமுள்ளவர்களுடைய வாய்ச்சொல் போதுமானது.*

*சேற்று நிலத்திலே வழுக்கி நடக்கிறவனுக்கு ஊன்றுகோல் துணை செய்வது போல, வாழ்க்கையிலே வழுக்கி நடக்கும் மக்களுக்கு பெரியோர் வாய்ச் சொல் துணை செய்யும்.*

*இவ்வாறு வள்ளுவப் பெருமான்-*

*இழுக்கல் உடையுழி*
*ஊற்றுக்கோல் அற்றே*
*ஒழுக்க முடையார்வாய்ச் சொல்-*
*என்று கூறியிருக்கிறார்*

*வாழ்க்கைக்கு வள்ளுவம் ஒரு வழிகாட்டி.*

முத்தமிழ்க்காவலர்
கி. ஆ. பெ. விசுவநாதம்

சர்வசித்தி விநாயகர், பாதாள இலிங்கேசுவரர், கோபுரத்திளையனார் ஆகியோரை வணங்கியவாறு சென்றால் வல்லாளன் மகராஜன் கோபுரத்தைக் காணலாம்.

உடல் நோயினால் வருந்திய அருணகிரிநாதர் தம் உயிரை மாய்த்துக் கொள்ள இக்கோபுரத்தின் மீதேறிக் குதித்தார். அப்போது முருகப் பெருமான் அவரைத் தம் கரத்தால் ஏந்தித்தரையில் விட்டார். அன்று முதல் அருணகிரிநாதர் வருத்தமின்றித் திருப்புகழ் பாடத் தொடங்கினார் என்பது வரலாறு.

நான்காம் பிரகாரத்தில் பிரமதீர்த்தத்துக்கு அருகில் கிளிக்கோபுரம் உள்ளது. இதன் தெற்கு முனையில் கிளியின் உருவங்கள் உள்ளன. அருணகிரி நாதர் கிளி உருக்கொண்டு "கந்தரனுபூதி" பாடினார் என்பது வரலாறு.

இத்தலத்தின் புனித மரமாகிய மகிழமரம் மூன்றாம் பிரகாரத்தை வலமாக வரும் போது காணப்படுகிறது.

பஞ்சமூர்த்தி மண்டபங்களைக் கடந்து சென்றால், கருவறையில் எழுந்தருளியுள்ள அண்ணாமலையாரை வழிபடலாம்.

அண்ணாமலையார் திருச்சந்நிதிக்கு இடப்பாகத்தில் அம்பிகை உண்ணாமுலையம்மை கோயில் கொண்டு விளங்குகின்றார்.

அண்ணாமலை அண்ணலை ஒன்றியிருந்து உள்ளமுருகி வழிபட்டால் மூன்று காலத்தின் வினைகளிலிருந்தும் நீக்கம் பெற்று உய்வு பெறலாம் என அப்பரடிகள் பாடியுள்ளார்.

"ஞானத்திரளாய் நின்ற பெருமான் நல்ல அடியார் மேல் ஊனத்திரளை நீக்கும்" என்று ஞான சம்பந்தப் பெருமான் அண்ணாமலையாரைப் பாடுகின்றார்.

"அண்ணாமலை தீபம்" அடியார் தம் ஆணவ இருளை நீக்கி ஞான ஒளி வழங்கும் ஞானக்கதிராக விளங்குகிறது.

ஆதாரம்: *தமிழகத்து மலைக்கோயில்கள்.*

### சிவ வழியில் வாழ வேண்டும்

*வாழ்க்கையில் இரண்டு பகுதிகள் இருக்கின்றன. இப்பிரபஞ்சத்துக்குரிய பகுதி ஒன்று. பரமசிவத்துக்குரிய பகுதி மற்றொன்று. நல்ல பக்தன் சிவத்துக்குரிய பகுதியை வாழ்க்கைக்கு என்றே வைத்துக் கொள்ள வேண்டும். பின்பு இவ்வுலகுக்குரிய பகுதியை வெறும் விளையாட்டாக அல்லது நாடகமாகக் கருத வேண்டும்.*

சுவாமி சித்பவானந்தர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறை சிந்தனையை வளர்க்கும் இந்து மதக் கிரியைகள்

இந்து மத வரலாற்றின் அடிப்படையைக் கொண்டு நோக்குமிடத்து வேத காலம் தொடக்கம் இன்று வரையில் கிரியைகளால் தான் இந்து மதம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. கிரியைகளே இந்து மதத்தவர்க்கு வாழ்வு அளித்துக் கொண்டிருக்கிறது. அவ் வகையில் மதமும் வாழ்க்கையும் பின்னிப் பிணைந்த நிலையை நோக்கலாம்.

கிரியை என்னும் வடமொழிச் சொல்லுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல் வினை அல்லது செயல் எனக் கூறலாம். இச் சொல்லின் அமைப்பு கிரியைகளை மேற் கொள்வதால் கன்மம் உருவாக்கப்படுகிறது என்பதேயாம்.

*கரணவாய்*
*ஸ்ரீ செல்வச்சிரநாதக் குருக்கள்*

ஒவ்வொரு செயலுக்கும் விளைவு உண்டாயினும் இறை செயலால் நல்லவிளைவை ஏற்படுத்துபவையே இந்து மதம் கூறும் கிரியைகளாம்.

கிரியைகளை ஆன்மார்த்தம், பரார்த்தம் பூர்வம், அபரம் என்று நான்கு வகையில் அடக்குவர். இவற்றைப்பற்றிய விபரங்களை வேதங்கள் ஆகமங்கள், சூத்திரங்கள், பத்ததிகள் ஆகியவை எடுத்துக் காட்டுகின்றன.

வேதங்களில் கூறப்பட்ட கிரியை மரபுகளைக் கிருஹ்யசூத்திரம், ஆபஸ்தம்ப சூத்திரம், சாங்காயன சூத்திரம், ஜைமினீய சூத்திரம் என்றும் -

ஆகமங்களில் கூறப்பட்ட கிரியை மரபுகளை அகோரசிவாசாரியார் பத்ததி, சோமசம்பு சிவாசாரியார் பத்ததி, நீலகண்ட சிவாசாரியார் பத்ததி சித்தாந்த சாராவாளி முதலியன விளக்கமாகச் செயல்முறைக்கேற்ப வடித்துத் தந்துள்ளன.

பெரும்பாலும் சூத்திரங்களில் பூர்வ அபரக் கிரியைகள் சிறப்பிக்கப்பட்டுள்ளன. பத்ததிகளில் பெரும்பாலும் ஆன்மார்த்த, பரார்த்தக் கிரியைகள் சிறப்பிக்கப் பெற்றுள்ளன.

**கிரியைகளின் நோக்கம்**

பூர்வ அபரக் கிரியைகள் முறையே தனி மனிதனது இறப்பின் முன்னும், பின்னும் மேற் கொள்ளப்படுவதாகையால் இல்லக் கிரியைகளாகக் கூறுவர். இல்லத்திலே தனிமனிதனது உடல் உள வளர்ச்சிக்காக அல்லது ஆத்மீக வளர்ச்சிக்காக இல்லக்கிரியைகள் மேற்கொள்ளப்படுகினறன. பரார்த்தக்கிரியை பிற உயிர்களின் நன்மைகருதி ஆலயத்திலே மேற்கொள்ளப்படுவது. பரார்த்தக் கிரியைகளைக் கோயிற்கிரியைகள் எனவும் கூறுவர்.

ஆன்மார்த்தம் என்பது விசேட தீட்சை பெற்றோர் தமது ஆன்ம ஈடேற்றம் குறித்துச் செய்யும் சிவலிங்க பூசையைக் குறிக்கும்.

பூர்வக்கிரியைகள், ருதுசங்கமனம் தொடக்கம் பதினாறு கிரியைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் இன்றைய நடை முறையில் சில பெயரளவில் மேற்கொள்ளப்படுகின்றன.

உபநயனம் என்னும் பூணூல் சடங்கு முதல் வருணத்தவர்க்கும் விஷேட தீட்சை பெற்றுக்கிரியா வழிபாட்டை மேற் கொள்வோருக்கும் அளிக்கப்படுகிறது.

சிவ தீட்சை எல்லோருக்கும் அளிக்கப்பட்டாலும் பெறுபவர் தொகை அருகி வருகிறது. வித்தியாரம்பம், அன்னப்பிராசனம், சௌளம் என்னும் துடக்குமயிர் வழித்தல், விவாகம் என்னும் கிரியைகள் பொதுவாக எல்லோரும் மேற்கொள்கின்றனர்.

அபரக்கிரியைகளில் மரணச்சடங்கு, காடாற்றுதல், அந்தியேஷ்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம் மாசிகம், ஆட்டைத்திவசம், வருடச் சிரார்த்தம் ஆகியன கைக்கொள்ளப்படினும் காலச் சூழ் நிலைகளுக்கேற்ப மாற்றங்களை அடைந்துள்ளன.

பரார்த்தகிரியைகள் நித்தியம், நைமித்தியம் காமியம் என மூன்று வகைப்படும். நித்தியம் என்று சொல்லப்படுவது ஒவ்வொரு நாளும் நடைபெறும் ஆலய பூசையைக் குறிக்கும். இது செய்யும் குருவின் ஆத்ம சுத்தி தொடக்கம் இறைவனுக்குரிய அபிடேகம் முதல் தோத்திரம் ஈறாகிய கிரியைகளை உள்ளடக்குவதுடன் பரிவார மூர்த்திகளின் பூசை சண்டேசுர பூசை ஆகியவற்றையும் உள்ளடக்கும்.

நைமித்தியக் கிரியைகளில் மகோற்சவம் அலங்கார உற்சவம், நட்சத்திர மாச உற்சவங்கள் கும்பாபிஷேகம் என்பன அடங்கும். இக்கிரியைகளைச் செய்யவல்லகுருமார் ஆகம சித்தாந்த அறிவுள்ளவராயும் ஆசார ஒழுக்க நியதியுள்ளவராயும் ஆசார்ய அபிஷேகம் பெற்றவராயும் இருத்தல் அவசியமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயன்கள்

இந்து மதம் கன்மக் கோட்பாட்டுடன் கிரியைகளை இணைந்திருப்பதால் கிரியைகள் நல்ல கன்மத்தை வளர்க்க உதவுகின்றன. இதனால் இறை பற்றிய சிந்தனை வளர்க்கப்படுகின்றது. கிரியை ஞானத்தை நவில்கிறது எனச் சமய நூல்கள் எடுத்துக்கட்டுகின்றன; ஞானம் என்று கூறப்படும் போது பரஞானத்தையே உணர்த்துகின்றன.

இந்து மதக் கிரியைகள் பல்வேறு வகையான அறிவியலை வளர்க்கிறது. செயலில் விசாரணைகளை ஏற்படுத்தித் தத்துவ விளக்கங்களைத் தேடும் வாய்ப்பை அதிகரிக்கிறது. பகுத்தறிவுச் சிந்தனையை வளம்படுத்தி மனிதனை மிருக நிலையிலிருந்து வேறு பிரித்துக் காட்டுகிறது. இல்லையேல் மனிதனும் மிருகமும் சமமாக மதிக்கப்படுவர்.

### திருநீற்றின் பெருமை

திருநீறு அணிவதினால் எத்தனையோ நன்மை. தோல் வியாதி தீரும். உடலில் துர்நாற்றம் போகும். சிறு தெய்வத் தொல்லை இராது. புண்ணியம் வரும் நன்மை எல்லாம் வரும்.

மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு

சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு

தந்திரமாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு

செந்துவர் வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே.

**(இவ்வாறு ஞானசம்பந்தப்பெருமான் பாடியுள்ளார்)**

பாடற்கினிய வாக்களிக்கும் பாலும்
சோறும் பரிந்தளிக்கும்
கூடற்கினிய அடியவர் தம் கூட்டமளிக்கும்
தனமளிக்கும்
ஆடற்கினிய நெஞ்சே என்மேல் ஆணை கண்டாய்
தேடற்கரிய சீரளிக்கும் சிவாயநம என்று இடு நீறே.

இதிலிருந்து திருநீற்றின் பெருமை தெரிகிறதல்லவா?

நன்றி: **ஆன்மசக்தி**

## சிறுவர் சிவநெறி வட்டம்

15 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் "சிவநெறி" சிறுவர் வட்டத்தில் சேரலாம்.

உறுப்பினர்களாகச் சேர ஆர்வமுள்ளோர் "சிவநெறி" யில் வெளியாகும் இரு கூப்பங்களை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

உறுப்பினர்களாகச் சேர்ந்த மாணவர்கள் எழுதும் தரமான ஆக்கங்கள் "சிவநெறி"யில் அவ்வப்போது பிரசுரஞ் செய்யப்படும்.

ஆக்கங்கள் மாணவர்கள் தாமாகவே சொந்தமாக எழுதினார் என்பதைச் சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர் உறுதிப்படுத்த வேண்டும். உறுப்பினர் உறுப்புரிமை அட்டை அஞ்சல் மூலம் அனுப்பி வைக்கப்படும்.

விண்ணப்பம் அனுப்பி வைக்கவேண்டிய முகவரி

ஆசிரியர்
"சிவநெறி"
393, திருஞானசம்பந்தர் வீதி,
திருக்கோணமலை.

*முழுப்பெயர்: செல்வன் / செல்வி:-* ........................................

........................................

*வகுப்பு:*........................ *வயது*................

*பாடசாலையின் பெயர்*................................

................................................

*மாவட்டம்*........................................

*வீட்டு முகவரி:*........................................
........................................

*மாணவரின் கையொப்பம்*........................

................................................

*பாடசாலை அதிபரின் கையொப்பம்:*

................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழரின் தொன்மை பேசும் பழம்பெருஞ் சிவநெறி

ஓர் இனத்தின் பெருமை, அந்த இனம் தோற்றுவிக்கின்ற பண்பாடு, தத்துவம் ஆகியவற்றை வைத்துத்தான் தீர்மானிக்கப்படுகிறது.

தமிழினம் பண்டைக்காலத்திலேயே சிறந்த பண்பாட்டை உருவாக்கியிருந்ததால் தான், அது பிறரால் பெருமைப்படுத்தப் படுகிறது; போற்றப்படுகிறது. இதற்கு ஓர் எடுத்துக் காட்டுக் கொடுத்து விளக்கலாம்.

சமுதாய இலக்கியங்களில் அமைதியையும் ஒழுங்கையும் பேணும் நெறிமுறைகளில் ஒன்றுதான் கற்பு என்ற ஒழுக்கம். இது மனித சமுதாயம் எல்லாவற்றிற்கும் வேண்டிய பொதுவான ஓர் அடிப்படை ஒழுக்கமாகும்.

அறிவு வளர்ச்சி பெற்றுள்ள இன்று கூட அதன் இன்றியமையாமையைப் பல இனங்கள் உணராதிருக்கின்ற நிலையில் தமிழர்கள் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே - சமகாலத்தில் வாழ்ந்த ஏனைய இனங்கள் கற்பைப் பற்றி எண்ணியிராத நிலையிலேயே கற்பினை

'உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செய்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்
தொல்லோர் கிளவி.........'

என்று போற்றி வாழ்ந்தார்கள். இவ்வாறு தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது.

டாக்டர் சி. சத்தியமூர்த்தி

## இரு நெறிகள்

இதைப்போன்று பழங்காலத்திலேயே தமிழர்களின் வழிபாட்டு முறைகளே சமயமாகவும், சிறந்த சிந்தனைத் தொகுப்புகளே தத்துவமாகவும் உருவெடுத்தன. பிற்காலத்தில் இவை இரண்டும் இணைந்து சிவநெறி மால் நெறி - என்று இரு வங்வங்களைப் பெற்றன.

தமிழில் பிறமொழிகள் வந்து கலந்து தூய்மையைப் பாதித்தது போலவே, மேற்சுட்டிய தமிழர் சமய நெறிகளிலும் வேற்றுக் கொள்கைகள் வந்து புகுந்தன.

எனினும், எதிலும் உண்மை காணும் இயல்புள்ளவர்கள் தமது சமய நெறிக்குப் புறம்பாக வந்து கலந்த வேற்றுக் கொள்கைகளுக்குப் பலியாகாமல் தூய வடிவிலேயே அந்நெறிகளைக் கண்டும் பேணியும் வந்துள்ளனர்.

செந்தமிழ் நிலத்தெழுந்த இவ்விரு நெறிகளிலும் சிவநெறியே பழந்தமிழர் கொள்கைகளின் நேர் வாரிசாகக் கூறத்தக்கது.

மூலத்திராவிட மொழியின் பண்புகளை ஏனைய திராவிட மொழிகளைப் பார்க்கிலும் தமிழே பெரும்பான்மையாகக் காட்டும் தகுதியும் உரிமையும் உடையதைப்போல -

தமிழரின் தொன்மையான தத்துவ வழிபாட்டு முறைகளைச் சுட்டும் தகுதியும் உரிமையும் உடையது சிவநெறியே.

## சிவநெறியின் பழமை

தமிழ் நாகரிகத்தின் முதல் வரலாற்று ஏடாகச் சங்க இலக்கியங்களைக் கருதுகிறோம். ஆனால் தமிழ் நாகரிகத்தின் தொடக்கப்பகுதிகள் அதற்கு முன்பும் செல்கின்றன.

சிந்து வெளியில் 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு விளங்கிய நாகரிகம் பண்டைத்திராவிடருடையது தான் (தமிழர்) என்பது பல நிலைகளில் வற்புறுத்தப் பட்டிருந்தாலும், அந்நாகரிகத்திற்கும் தமிழ் நாகரிகத்திற்கும் நேரடித் தொடர்புகளை நாம் காட்ட முடியாது. அந்தத் தொடர்புச் சங்கிலி அறுந்து போயிருக்கும் என்பதை ஆய்வாளர்கள் ஒத்துக் கொண்டாலும், அத் தொடர்பை உறுதிப்படுத்தும் சான்றுகளைக் காட்டினால்தான் அதைப் பண்டைத் திராவிட நாகரிகம் என்பதை ஒத்துக் கொள்வார்கள்.

இவ்வாறு இரண்டு நாகரிகங்களிடையே விளங்கிய தொடர்பைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பது சைவசமயமே.

எனவே சைவநெறியின் தோற்றம் பழமையை நோக்கிச் செல்லச் செல்லத் தமிழ் இனத்தின் வரலாறும் பழமையைத் நோக்கிச் சென்று கொண்டே இருக்கிறது.

இவ்வாறு தமிழரின் தொன்மையைச் சுட்டி நிற்கும் பழம் பெருஞ் சிவ நெறியின் வழிபாட்டு உருவங்களில் மையமாக விளங்குவது சிவலிங்கமாகும்.

சிந்து வெளியில் சிவலிங்கங்கள் வழிபடப்பட்டன. இச் சிவலிங்கம் என்ற தொன்மையான வழிபாட்டு உருவம் தமிழர் நடுவே தோன்றி சைவத்தின் மையமாக வளர்ந்தது.

திருக்கோணமலை மாவட்டம், தம்பலகமம் பதியைப் பிறப்பிடமாகக் கொண்டவர் டாக்டர். சி. சத்தியமூர்த்தி அவர்கள். அன்னார் அமரத்வம் அடைவதற்கு முன்பு கோயம்புத்தூர் இராமகிருஷ்ண பல்கலைக்கழகக் கல்லூரியில் தமிழ்த் துறைத் தலைவராகப் பணிபுரிந்தார். அன்னார் எழுதிய "சிவலிங்க வழிபாடு" என்ற ஆய்வு நூலிலிருந்து ஒரு பகுதியே இங்கு தரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாயன்மார்களுக்கு குருபூசை கட்டாயம் நடத்த வேண்டும்

சிவபெருமானே முழுமுதற் கடவுள். வேதமுஞ் சிவாகமமுமே அவர் அருளிச் செய்த முதனூல்கள். அவற்றுள் வேதம் பொது நூல். சிவாகமம் சிறப்பு நூல்.

விபூதி உருத்திராக்கங்களே சிவசின்னங்கள் ஸ்ரீ பஞ்சாக்ஷரமே சிவ மூல மந்திரம். சிவலிங்கோபாசனையே சிவபிரானுக்குச் செய்யப்படும் மிக மேலாகிய வழிபாடு.

விபூதி ருத்திராக்ஷதாரணமும் ஸ்ரீ பஞ்சாக்ஷரஜபமும் சிவலிங்கோபாசனையும் வேதத்தில் விதிக்கப் படினும் சிவாகமத்தில் விதித்தபடி சிவதீக்ஷை பெற்றுக் கொண்டு அனுட்டிக்கப்பட்டாலன்றி முத்தி சித்தியாது.

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள்**

இவற்றை விசுவசித்தபடியே ஒழுகும் மார்க்கம் சைவசமயம் எனப்படும்.

அறுபத்து மூன்று நாயன்மார்களாலும் மாணிக்கவாசக சுவாமிகளாலும் பெரியபுராணஞ் செய்தருளிய சேக்கிழார் நாயனாராலும், சைவ சித்தாந்த சாத்தி ரோபதேசஞ் செய்தருளிய திருக்கைலாச பரம்பரைச் சந்தான குரவர்களாகிய மெய்கண்ட தேவர் அருணந்தி சிவாசாரியார், மறை ஞானசம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் ஆகிய நால்வர்களாலுமே சைவசமயம் தழைத்தோங்கியது.

ஆதலினால் சைவசமயிகள் யாவரும் ஆவ்வுண்மை நாயன்மார்களுக்கு விதிப்படி சிரத்தையோடு குருபூசை நடத்தல் வேண்டும்.

அந்நாயன்மார்களெல்லாருக்கும் குரு பூசை செய்ய சக்தியில்லாதவர்கள், அவர்களுள்ளே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்னும் சமயகுரவர்கள் நால்வருக்கும்-

சேக்கிழார் பெருமான், மெய்கண்ட தேவர் அருணந்தி சிவாசாரியார், மறை ஞானசம்பந்த சிவாசாரியார், உமாபதி சிவாசாரியார் ஆகிய ஐவருக்கும் குருபூசை செய்வது அத்தியவசியமாகும்.

## பொல்லாத ஆசை

*"நாம் எப்படி வாழ்கிறோமோ அப்படியே மற்றவர்களும் வாழ வேண்டும்" என்று நினைப்பது உத்தமமான எண்ணம்.*

*ஆனால் எண்ணம் உத்தமமாக இருந்து விட்டால் போதுமா?*

*நாம் டாம்பீக வாழ்க்கை நடத்திக் கொண்டு மற்றவர்களும் அப்படி இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால அது நடக்குமா?*

*அப்படியே நடந்து அமெரிக்கா மாதிரி எல்லாரும் பகட்டாக வாழ முடிந்தால் அது நல்லது தானா?*

*லௌகிகமான சௌக்கியங்கள் அதிகமாக ஆத்மவிருத்திக்கே வழியில்லாமல் தானே ஆகியிருக்கிறது? எத்தனை போட்டாலும் திருப்தியில்லாமல் கபளீகரம் பண்ணுகிற நெருப்பு மாதிரி தான் இந்த ஆசை என்பது.*

*அது எவ்வளவு சௌகரியம் இருந்தாலும் திருப்திப்படாமல் இன்னும் புதிது புதிதாக சௌக்கிய சாதனங்களைத் தேடிக்கொண்டு தான் இருக்கும்.*

*அதிருப்தி, குற்றங்கள் ஆகியவற்றைத் தான் அமெரிக்காவில் பார்க்கிறோம்.*

*சௌக்கிய சாதனங்கள் என்று நினைக்கிறவைகளை விட்டால் தான் சாந்தி கிடைக்கும்.*

*அமெரிக்க மக்கள் இப்படி நினைக்க ஆரம்பித்து விட்டார்கள். அவர்கள் தியானம், யோகம், பஜனை என்று கிளம்பியிருக்கிறார்கள்.*

— **காஞ்சிசுவாமிகள்**

### துன்பங்களை நீக்கும் உருத்திராட்சம்

உருத்திராட்சம் என்றால் என்ன தெரியுமா?
சிவன் திருக்கண்ணில் இருந்து வந்த கண்ணீர் தான் உருத்திராட்சம் எனப்படுகிறது.
உருத்திராட்சம் அணிவதினால் என்ன பயன்?
உருத்திராட்சம் அணிவதனால் உடற்பிணி நீங்கும், சனியினால் வரும் துன்பம் இராது. உருத்திராட்சத்தில் படும் தண்ணீர் நம் உடலில் படுவது மிக மிக உயர்வு என்று சொல்லப்படுகிறது.

விளக்கம்: தருமபுரம் பி. சுவாமிநாதன்
(நன்றி: ஆன்ம சக்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாட்டின் முதற்பாட்டு

சிவநெறிச் செல்வர் வே. ச. சுப்பையா

இன்சொல்லும், பணிவும் உடையவனாயிருந்தும், கையில் ஒன்றுமில்லாதானை உலகம் இகழும் கடுஞ் சொல்லும் பணிவாமையுமுள்ளவனைச் சூழ்ந்து புகழ்ந்து பணிந்து அவன் சேவடிக்கீழ் ஒதுங்கும்.

புகழுடையவரை இகழ்ந்தும் இகழ்ச்சியாளரைப் புகழ்ந்தும் வரும் உலகம் அறிவுடையதல்ல மயக்கமாகிய பித்துடையது என்றார் குமரகுருபரர்.

"இன்சொல்லன் தாழ் நடையன் ஆயினும் ஒன்றில்லானேல்
வன்சொல்லின் அல்லது வாய்திறவா என் சொல்லினும்
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடல் ஞாலம்
பித்துடைய அல்ல பிற"

இதனால் ஆவதை ஒழித்து, அழிவதை மேற்கொள்ளலும் போற்றப்படுவதைத் தூற்றுவதும், தூற்றப்படுவதைப் போற்றுவதும் ஆகிய செயல்கள் பித்தின் இலக்கணம். காரணமின்றிச் சிலர் சிறிதும் பொருந்தா உரை பகர்வர். அதுவும் பித்தின் இலக்கணமேயாகும்.

இறைவன் இத்தகைய பித்தன் அல்லன். உலகப்பித்தினைப் போக்கித் தன்பால் பித்துக் கொள்ளுமாறு அருள் செய்பவன் இறைவன். சுந்தரரை உலக மையலில் சிக்கா வண்ணம் தடுத்து ஆட்கொள்ளவே பித்தன் என்ற பெரும் பெயர் பெற்றார்.

ஆளுடைய நம்பிகள் அருளிய திருப்பாட்டின் முதற்பாட்டின் முதன் மொழி பித்தன் என்பது. இத்திருநாமத்தின் சீரிய உட்கருத்தினைக் காண்போம். நம்பிக்கைத் திருமணம் தொடங்கும். அமையத்து பெருமான் கிழவேதியர் கோலம் பூண்டு பந்தரிடையெய்தி "ஆரூரன் என் அடிமை" என்றார்.

ஆரூர் அந்தணர், அந்தணர்க்கு அடிமையாதல் எங்கும் கேட்டிலம். "நீர் பித்தரோ" என எள்ளிநகையாடினார். யான் பித்தனுமாக பேயனுமாக வித்தகம் பேசவேண்டி பணிசெய்ய வெண்டுமென்றார். வேதியர் பின்னர் அற்புத பழ ஆவணம் காட்டி ஆட்கொண்டார்.

முன்பு எனை பித்தன் என்றனை "பித்தன்" என்றே பாடுக என்றார். ஆரூரர் "பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா என்று பாடினார்.

வல்ல வழக்காடிய வேதியரை இன்னாரென்று அறியாத நிலையில் முறையில்லாது "பித்தரோ நீர் என்று கூறிய பொருளில் அவரை இன்னார் என அறிந்த பின்னரும்...... பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா.

"அத்தா உனக்களாய் அல்லேன் எனலாமே என்று கழிந்தகற்கு இரங்கிய சமயத்தும் ஆண்டவனை "பித்தன் என்று நாணாது கூறத்தலைப்பட்டிருப்பதா என்பது ஆராய்தற்குரியது.

உலகப் பித்துடையார்க்கு மெய்யுணர்வின் வடிவாம் இறைவன் பித்தனாகக் காணப்படுதல் பொருத்தமே. ஆனால் "பேயாய்த் திரிந்தெய்தேன் பெறலாகா அருள் பெற்றேன்" என்று தமது இழிதக வினையும் ஒப்பிட்டுக் கண்ட ஆரூரர் இறைவனை உலகவர் கூறும் பொருளில் பித்தன் என்று உணர்த்திராதிலை? பின்னை இறைவனை எத்தகைய பித்தன் என்றாரெனின் "அன்புப் பித்தன்" "அருள் பித்தன்" என்றே உரைத்திருக்க வேண்டும்.

பெருமான் கயிலையில் அருள் செய்த சாலுமொழியால் தடுத்தடிமை கொள்வான் மண்ணிடை வந்து கிழவேதியராய்த் தமது பரவியல்பைக் கருதாது தனதடிமையென்பதை வழக்காடி வென்று தம்மை அறிவுறுத்தி ஆரூரர்க்குப் பண்டைய நிகழ்ச்சியினை நினைவுறுத்தியது ஆண்டவனது அருள் பித்தன்றோ அதனை நினைத்தே ஆருரர் பித்தன் என்று கூறி இருக்க வேண்டும். இப்பித்தினாலன்றோ இறைவன் தம்மைத் தொழவாரிடை குற்றமே. குடிகொண்டிருப்பினும் அதனைக் குணமாகக் கொண்டு "தொழுவார் அவர் துயராயின் தீர்த்தல் உனதொழிலே" என்றபடி திங்கள் தனது கலை தேயப் பெற்றபோது இறைவனைப் புகலடைந்தமையால் இடுக்கண் களைந்து முடியலி அணிந்து "பிறைசூடி" என்று பட்டம் பெற்றதை அடுத்துக் கூறியுள்ளார். அனைத்து உயிர்க்கும் தலைவனாய் நிற்கும் பெருமையால் பெருமானே என்றார்.

வினையுள் அழுந்தும் மக்களைக் கடைத்தேற மணற்சோற்றில் கல் ஆராய்வார் போலன்றி மக்களது தகுதி நோக்காது தனது கருணையே துணையாக் கொண்டு உய்விப்பவன் என்பார். அருளாளர் என்றழைத்தார். இதனால் ஆரூரன்பால் ஆண்டவன் கொண்டபித்து அருள்பித்தெனல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்ஙனம் பித்தாதல் இறை இயல்பாதலை ஆரூரர் பிறிதோரிடத்து.

"கடைந்தெழுத் ஆல நஞ்சு கண்டவர் மிக
இரிய அமரர்கட்கு அருள்புரிவது கருதி நீல
மார் கடல் விடந்தனையுண்டு கண்டத்தே
வைத்த பித்தம் செய்தசீலம்" என்ற விடத்து

பித்த என்றது அருள் பித்தாதலை விளக்கி நின்றது.

அருள்மொழித்தேவர் கண்ணப்பர் புராணத்து தேவமால் கொண்டான் இத்திண்ணன் என்று கூறியிருப்பதும் நினைக்கத்தக்கது. ஆரூரது இக்கருத்தினையுணர்ந்த சேக்கிழார் பெருமான் அன்புப் பித்தன் ஆண்டவன் என்பதை அவர் சரிதையில் மூன்றிடங்களில் அமைத்து விளக்கியுள்ளமை அறிந்தின்புறற்குரியது. ஒன்று நாம் தடுத்தாண்டோம் ஆண்டவனார் அவ்வொலியினை "என்றெழும் ஓசைகேளா ஈன்ற ஆன்கனைப்புக் கேட்டகன்றென நம்பி கேட்டார் என்பது இரண்டாவது மெய்த்தாயினுமினியானை அவ்விய நாவலர்பெருமான் என்பது. மூன்றாவது கயிலையில் கண்ணுதலை அடைந்த நிலையை "சேணிடை விட்ட கன்று கோவினைக் கண்டணைந்ததெனன்" என்பது பெற்ற மனம்பித்து என்ற பழமொழி இதற்குச் சான்றாகும்.

## பாடல் பெற்ற திருத்தலங்கள் 275

பாடல் பெற்ற திருத்தலங்கள் 275 ஆகும்

சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் 63 திருத்தலங்களும் காவிரிக்கு தென்கரையில் 127 திருத்தலங்களும் உள்ளன.

ஈழ நாட்டில் இரண்டு திருத்தலங்கள் உள்ளன.

பாண்டிநாட்டில் 14, மலை நாட்டில் 1, கொங்கு நாட்டில் 7, நடு நாட்டில் 22, தொண்டை நாட்டில் 32, துளுவ நாட்டில் 1, வடநாட்டில் 5, திருவாடவாயில் 1, எல்லாமாக மொத்தம் 275 திருத்தலங்கள்.

நாயன்மார்களான திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் 275 திருத்தலங்களிலும் திருவாய்மலர்ந்தருளிய திருப்பதிகங்களின் விவரம் வருமாறு

சம்பந்தர் – 383 திருப்பதிகங்கள் 4147 திருப்பாடல்கள் அப்பர் – 312 திருப்பதிகங்கள், 3066 திருப்பாடல்கள், சுந்தரர் 100 திருப்பதிகங்கள் 1013 திருப்பாடல்கள்

மாணிக்கவாசகர், நாயன்மார்களில் நால்வராக வைத்து எண்ணப்படுகிறார்கள். இருப்பினும் இவரே காலத்தால் முந்தியவர் என்பது ஆராச்சியாளர்களின் கருத்து. இவர் பாடிய திருப்பாடல்கள் 656. சம்பந்தர், அப்பர், சுந்தரர் பாடிய திருப்பாடல்கள் தற்போது தேவாரம் எனறு அழைக்கப்படுகின்றது. முற்காலத்தில் இவை திருக்கடைக்காப்பு என்று அழைக்கப்பட்டதாக கூறப்படுகின்றது.

தருமபுரம் பி. சுவாமிநாதன்

## வெள்ளிதான் சமய வாழ்வா– வேண்டுமா இந்தக் கூத்து?

1. கோயிலில் மட்டுந்தானா,
குடும்பத்தில் சமயம் எங்கே?
வாயிலே மட்டுந் தானா,
வாழ்விலே சமயம் எங்கே?
நோயெனில் மட்டுந்தானா,
நொடி, மணி, நாளும் எங்கே?
பாயிலே கிடந்தால் தானா,
பாயுநாள் எல்லாம் எங்கே?

2. நின்றாலும், இருந்திட்டாலும்,
நடந்தாலும், கிடந்திட்டாலும்,
என்றுமே சிவனார் தாளின்
இணை நினை என்னும்போதில்:
ஒன்றெனில் ஒன்றாய் எண்ணி,
உண்டெனில் உண்டென்றெண்ணி
நன்றாகச் சமய வாழ்வை
நாளாந்தம் வாழ்தல் வேண்டும்!

3. ஆண்டெலாம் மச்சம் - ஆனால்
ஐப்பசி மச்சம் இல்லை!
வேண்டுமா இந்தக் கூத்து?
வெள்ளிதான் சமய வாழ்வா?
தீண்டலாம் வியாழன் மாலை -
திரும்பவும் சனிநாட்காலை!
ஈண்டெலாம் போலி வாழ்வே
என்றுமொன் றாகி வாழ்வோம்!

4. சடங்கெல்லாம் வாழ்க்கை யல்ல!
சலசலப் பரவம் அல்ல!
படங்களும், பூவும் அல்ல!
பஞ்சாங்க நாட்கள் அல்ல!
இடம், பணம்,ஆளுக்கேற்ப
எடுத்திடும் சோடிப்பல்ல!
அடங்கவே மூன்றும் ஒன்றாய்
அமைதியாய் வாழுவோமா?

"தாமரைத்தீவான்"

## சமயகுரவர் நால்வரின் வயசு

அப்பருக்கெண் பத்தகதொன் றருள்வாத வூருக்குச் செப்பியநா லெட்டினிற் றெய்வீக – மிப்புவியிற் சுந்தரருக்கு மூவாறு தொன்ஞான சம்பந்தர்க் கந்தம் பதினா றறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குளக்கோட்டு மன்னன் காலத்து கோணேஸ்வரம் மீண்டும் உருவாக வேண்டும்

ஆகமநூல் கூற்றின்படி பெரும் வழிபாட்டிலிருந்த தெய்வ உருவங்கள், ஆலயங்கள் என்பன சிதைந்தால் அங்கு வாழுகின்ற மக்களுக்குப் பெரும் துன்பங்கள் ஏற்படும் என்று கூறப்படுகின்றது அவ்வூர் மிகவும் பின்தங்கி மக்கள் துன்ப துயரங்களுக்கு ஆளாகி ஏழ்மை நிலையில் இருப்பதற்கு இதுவே காரணம் என்று நம்புகிறார்கள். நம்பிக்கை வீண்போவதில்லை.

தொன்மை வாய்ந்த ஆலயங்கள், அங்கு வழிபடப்பட்டு வந்த திருவுருவங்கள் என்பன முழுமையாகத் திருப்பணி செய்யப்பட்டு சீரமைக்கப்படும் போது உலகம் முழுவதும் க்ஷேமமாயிருக்கும் என்பது சங்கராசாரிய சுவாமிகளுடைய கருணை உள்ளம்.

இதனைக் கருத்திற் கொண்டு கோணேஸ்வர ஆலயமும் திருவுருவங்களும் பேணப்படவேண்டும். இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் இந்துக்களும் எதிர்காலச் சந்ததியும் கோணேஸ்வரத்தின் தொன்மையையும், தெய்வீகச் சிறப்பையும் ஆழ்ந்து சிந்தித்து திரிகரண சுத்தியோடு தொண்டாற்ற முன்வர வேண்டும்.

மதவெறி கொண்டவர்களின் செயற்பாட்டிற்கு இந்துக்கள் இடமளிக்கக் கூடாது.

**ஞானசிரோன்மணி பண்டிதர் இ. வடிவேல் அவர்கள்**

திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றை முன்னெடுத்துச் சென்று குளக்கோட்டு மன்னன் காலத்திலிருந்த கோணேஸ்வரத்தை மீண்டும் உருவாக்க வேண்டும்.

"நின்றுணும் சமணும் இருந்துணும் தேரும் நெறியல்லாதன புறங்கூற" என்று திருக்கோணேஸ்வரத் திருப்பதிகத்தில் கூறப்பட்டுள்ள திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரின் திருவாக்கின் உட்பொருளை உணர்ந்து சைவ உலகம் செயல்பட வேண்டும்.

*"திருக்கோணேஸ்வரம் - [illegible] வண்மையும்"-*
என்ற ஆய்வு நூலிலிருந்து.

# மன உறுதி தரும் திருப்பாவை

திருப்பாவையில் உள்ள முப்பது பாடல்களில் திருமாலின் வாமன அவதாரத்தைக் குறித்துத்தான் மிக அதிகமாக பதினான்கு இடங்களில் வருகிறது.

யாரையும் அழித்து ஒழித்துப் பயமுறுத்தாத அவதாரம் வாமன அவதாரம் தான்.

சிரிக்க வைக்கும் தோற்றம், சாமர்த்தியமான நடத்தை, சாதனை புரியும் ஆற்றல், மூவுலகையும் ஈரடியால் அளந்து, மூன்றாவது அடி எங்கே? எனக் கேட்டு மகாபலியின் சிரசில் காலை வைத்து அவனுக்கு முக்தி கொடுத்தான் நாராயணன்.

சிறிய மனிதன் அடக்கமான பண்புடையவன்- பெரிய சாதனை செய்ய முடியும் என்பதற்கு வாமன அவதாரம் ஓர் எடுத்துக் காட்டு.

"மகாபலிக்குக் காலை வைத்து அருளிய கேசவன் என் கைத்தலம் பற்றுவது போலக் கனாக் கண்டேன் தோழி"- என்கிறாள் கோதை. கனவு பலித்து விடுகிறது.

தன்னம்பிக்கை, வைராக்கியத்துக்கு ஆண்டாள் ஓர் எடுத்துக் காட்டு. திருப்பாவை முப்பதையும் சொல்பவர்களுக்கு மன உறுதியும் திட நம்பிக்கையும் நிச்சயம் வரும்.

-"திருப்பாவை" விழாவில்
ஆண்டாள் மகிமை பற்றி
குமாரி அனந்தன் பேசியது.

# சித்தசுத்தி தரும் திருநீறு

நிற்கிற பொருள் நீறு; நின்று போவதும் நீறு. இதுவே நெற்றியில் நீறு. ஞானம் எல்லாப் பொருளையும் நீறாகப் போகும்படி செய்து விடுகிறது. பகவத் கீதையில் பகவான் "அர்ஜுனா அக்னியில் எத்தனை விறகு போட்டாலும் பஸ்மம் ஆகிறது" - என்கிறார். உண்மை விளக்கமான திருமணியோ, திருநீறோ இட்டுக் கொண்டால் நாம் உண்மையை நிலை நிறுத்துகிறோம் என்றாகும். மேலும் கெட்டவழியில் செய்ய விடாமல், நற்காரியங்களைச் செய்ய, சீலம் உண்டாக்க இந்தச் சின்னங்கள் நினைவூட்டுகின்றன. இதனால் சித்தசுத்தி பெறுகிறோம்.

- காஞ்சி ஸ்வாமிகள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுள் உண்டா?

"கடவுளை உன்னால் காட்ட முடியுமா?"
நான் சிவராமனிடம் கேட்டேன்.
"காட்டமுடியும்.....
"எப்படி?
நான் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும்.
கேள்
"உனக்கு மூளை உண்டா?"
"உண்டு.."
எங்கே அதை எனக்கு காட்டு பார்க்கலாம்...?
சிவராமனின் கேள்வி என்னை திகைக்க வைத்தது.
"இது முட்டாள்தனமான கேள்வி"
சிவராமன் சிரித்து விட்டு சொன்னான்:
"எனது கேள்வி முட்டாள் தனமானது என்றால்
உனது கேள்வியும் முட்டாள்தனமானதுதான்.
உனது மூளையையே காட்டமுடியாத நீ கடவுளைக்-
காட்டு என என்னிடம் கேட்டதும் மூளையற்ற
முட்டாளின் கேள்விதான்.."
என்னால் ஏதும் பேச முடியவில்லை.

## நம்பிக்கை தான் இறைவன்

எனக்கு சுகப் பிரசவம் நடக்க வேண்டுமென்றால் வளவு வைரவருக்கு தேங்காய் உடைத்துக் கற்பூரம் ஏற்றுங்கள். உங்கள் வரட்டுத் தத்துவங்கள் என்னைக் காப்பாற்றா...?

**சிந்தனைச் சிதறல்கள்**
**-சந்தா-**

பிரசவ வாட்டில் மனைவியை மகப்பேற்றுக்கு சேர்த்து விட்டு வந்த என்னை அந்தக் குரல் விடாது துரத்திக் கொண்டிருந்தது.

ஐந்து வருடங்கள் பிள்ளை இல்லாமல் தவித்த எங்களுக்கு இது முதற் பிரசவம்.

"காளி ஆச்சியிடம் நான் மடியேந்தின வரம் என்றாள் என் மனைவி"

"இல்லை இடைவிடாத மருத்துவ முயற்சி என்றேன் நான்.

நாளும், பொழுதும் எங்களிருவருக்கும் உள்ள சண்டையும் இதுதான்.

இன்று, என் மனைவியின் அந்த ஒரே ஆசை விருப்பம், நம்பிக்கை.

"அப்படி கடவுளை நீங்க நம்ப வேண்டாம். எந்தவொரு செயலுக்கும் நம்பிக்கை ஒன்று தேவையல்லவா! இந்த நம்பிக்கை இல்லாது போனால் செயல் நடக்குமோ? இந்த நம்பிக்கை எனக்கு இறைவனாகத் தெரிகிறது.

என்னை அவளின் நம்பிக்கை வார்த்தைகள் கட்டிப் பிடித்தன.

"ஐந்து ஆண்டு. வயசு முப்பத்து மூன்று. கவனமாக இருக்க வேண்டும். - டாக்டரின் ஆலோசனை. என்னை சத்திர சிகிச்சை செய்து கொண்டிருந்தது.

அவளுக்கு ஏதும் நடந்து விட்டால்... என்முதல் வாரிசும் அதற்கு பலியானால்.... என் உடல் பற்றிக் கொண்டது.

என்னால் அந்தக் கதிரையில் இருப்புக் கொள்ள முடியவில்லை.

என்னுள் நான் நம்பாத அந்த மனைவியின் "நம்பிக்கை ஆசை" படரவா தொடங்குகின்றது?

கற்பூரம், தேங்காய், தீப்பெட்டி - இவைகளை நான் தேட ஆரம்பித்தேன்.

## பூட்டுக்கள்-

கோவில் வாசலை மிதித்த போது- முன்பெரிய கதவில்- தொங்கிக் கொண்டிருந்த ஐந்து கிலோ எடையுள்ள பெரிய ஆமைப் பூட்டுத்தான் என் கண்களுக்கு தெரிந்தது.

கண்களை நிலத்தில் பதித்த போது உண்டியலுக்கு காவலாக போடப்பட்டிருந்த பெல்ஜியம் நிக்கல் இரும்புப் பூட்டுத் தெரிந்தது.

பூசை நேரம் பற்றிய விளம்பரப் பலகைக்கு நூறு கிராம் பூட்டு காவலாக இருந்தது. அன்று எங்குமே என் கண்களுக்கு பூட்டுக்கள் மயம் தான்.

"இறைவா உன் சந்நிதியிலும் பூட்டுக்களா?"

இரு கரம் தூக்கி, தலையில் இருத்தி ஆசை தீர இறைவனை வணங்க வேண்டும்போல் இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறிக்கு எமது வாழ்த்துக்கள்

# டில்கா கிறீம் ஹவுஸ்

256, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை.

✤ குளிர்பான வகைகள்

✤ சிற்றுண்டி வகைகள் மற்றும்

✤ M. D. உற்பத்திப் பொருட்கள்

மொத்த சில்லறை விற்பனை

# DILKA CREAM HOUSE

V

256, Thirugnanasampanthar Street,

Trincomalee.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் செய்திச் சரம்

★ தம்பலகமத்தில் பல தசாப்தங்களாகக்குடி தண்ணீர் இன்றி இருந்த மக்களுக்கு சென்ற 20-10-95ல் பேரவையின் அபிவிருத்தித்திட்டப் பணி மூலம் தம்பல கமம் சந்தியிலிருந்து ஆதிகோணேஸ்வராலயம் வரை குடி தண்ணீர் குழாய்த்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் இத்திட்டத் தை நெறிப்படுத்தி உதவினார்கள். இதன்மூலம் மக்கள் குடி தண்ணீர் வசதியைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. திட்டத்திற்கான மொத்தச் செலவு 35 லட்சம் ரூபா. இதனைப் பின்வரும் நிறுவனங்கள் வழங்கியமை குறிப் பிடத்தக்கது.

* அகதிகளுக்கான ஐக்கிய இராச்சிய உயர்ஸ்தானிகராலயம் - 22 இலட்சம் ரூபா
* தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்புச் சபை - 11 " "
* தம்பலகமம் பிரதேசச் செயலகம் - 2 " "

★ அல்லை இடது கரை - 03ல், (இலிங்கபுரத்தில்) மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான இந்து இளைஞர் மன்ற அலுவலகக் கட்டடத்தை அமைப்பதற்கான அடிக்கல்லை பேரவையின் ஆலோசகரும் காந்தீயப் பெரியாருமான இறைபணிச்செம்மல் திரு. பொ. கந்தையா அவர்கள் நாட்டி வைத்தார்கள். இக் கிராமத்தைச் சார்ந்த திருமதி. பூபாலபிள்ளை அவர்கள் மேற்படி கட்டடம் அமைக்கத் தனது காணியில் ஓர் பகுதியைப் பேரவைக்கு அன்பளித்தமையை நன்றியுணர்வுடன் குறிப்பிடுவதில் மகிழ்வடைகின்றோம்.

★ றோயல் நெதர்லாந்து ஸ்தானிகராலய நிதி உதவியுடன், அண்மைக் காலங்களில் தடுப்புக் காவலி லிருந்து விடுதலை செய்யப்பட்டவர்களுக்கு சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் விவசாயச் செய்கை, சில்ல றைக் கடை, மரக்கறி வியாபாரம் போன்றவற்றிற்காக தலா 5,000/- ரூபா வீதம் பேரவையால் கடனுதவி யாக வழங்கப்பட்டது. இத்திட்டத்திற்காக முன்னின்று உழைத்த நெதர்லாந்துத் தூதுவராலயத்தினருக்கும் குறிப்பாகத் தூதுவராலயத்திட்ட அலுவலர் திரு. ஸ்ரான்லி ஜோசெப் அவர்கட்கும் நன்றியை உரித்தாக்குகின்றோம். திட்டத்திற்கான மொத்த நிதி 5,43,375/= ரூபா.

★ கொழும்பில் நடைபெற்ற நான்காவது உலக சைவப் பேரவை மாநாட்டில் பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளரும், இலங்கை இந்து இளைஞர் பேரவையின் தலைமைச் செயலாளருமான "சிவஞானச் செல்வர்" செல்லப்பா சிவபாதசுந்தரம் அவர்கள் கலந்து கொண்டு இச்சைவப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப் பாளர் தவத்திரு. சிவானந்தி அடிகளாரிடம் பல ஆக்க பூர்வமான செயல்திட்டங்கள் பற்றி கலந்துரையாடியமை கவனத்திற்குரியதாகும்.

★ திருக்கோணமலை மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் காப்பாளர் ஞானசிரோன்மணி பண்டிதர் திரு. இ. வடிவேல் அவர்களால் எழுதப்பட்ட "திருக்கோ ணேஸ்வரம் தொன்மையும் வண்மையும்" என்ற ஆய்வு நூல் பேரவையின் சார்பில் வெளியிடப்பட்டது. இவ் வெளியீட்டின்போது நூலாசிரியர் பொன்னாடை போர்த்தி யும் பாராட்டுப் பத்திரம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார். இதற்கான முழுச்செலவையும் பேரவையே பொறுப்பேற் றுக் கொண்டது. மொத்தச் செலவு 80,000/= ரூபா.

★ வட்டுக் கோட்டைத் தொகுதி தமிழ்ச்சங்கத் தலைவர் சிவநெறிச் செல்வர் பண்டிதர் திரு. அ. ஆறு முகம் அவர்களால் இயற்றப்பட்ட "கோணேசர் ஆற்றுப் படை" என்ற நூலும் அண்மையில் பேரவையால் வெளி யிடப்பட்டது. நூலாசிரியர் பொன்னாடை போர்த்தியும் பாராட்டுப்பத்திரம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார். இதற்கான முழுச்செலவையும் பேரவையே பொறுப் பேற்றுக் கொண்டது. மொத்தச்செலவு 27,000/= ரூபா

★ தம்பலகமம் கிராமத்தின் சிப்பித்திடல், கள்ளி மேடு, கரைச்சைத்திடல், கூட்டாம்புளி, பட்டிமேடு ஆகிய பகுதிகளில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்ள இலங்கை கனடா அபிவிருத்தி நிதி நிறுவனம் 27½ லட்சம் ரூபாவைப் பேரவையின் திட்ட முன்வைப்புக் களின் மூலம் வழங்க முன் வந்துள்ளது. இதற்கான ஒப்பந்தப்படிவத்தில் கையொப்பம் இடும் நிகழ்வும் முதலாவது கட்டக் கொடுப்பனவாக 14 லட்சம் ரூபா வுக்கான காசோலை வழங்கலும் அண்மையில் தம்பல கமம் பட்டிமேடு இ. கி. ச. சாரதா வித்தியாலயத்தில் நடைபெற்றது. மேற்படி நிதி நிறுவனத்தின் பிரதிப்பணிப் பாளர் திரு. ரி. எல் விஜயதுங்கா அவர்களும் திட்ட அலுவலர் திரு. ஏ. சொர்ணலிங்கம் அவர்களும் கலந்து கொண்டு இவ்வைபவத்தை சிறப்பித்தனர்.

★ திருக்கோணமலைத் தமிழ் அறிஞர் தி. த. கனக சுந்தரம்பிள்ளை நினைவு விழா வழமைபோல சிறப் பாகப் பேரவையால் நடாத்தப்பட்டது. இவ் விழாவை ஒட்டி நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் மாணவர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டார்கள்.

★ வெருகலம்பதி அருள்மிகு ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயம் மீண்டும் பக்தர்களின் வழிபாட்டுக்காக பாலஸ்தாபனக் கிரியைகளுடன் திறக்கப்பட்டுள்ளது. இவ் ஆலய வளர்ச்சியில் அக்கறை காட்டி வரும் நாம் பேரவையின் இந்துகலாசார நிதியிலிருந்து 10,000/= ரூபாவை நன்கொடையாகவும் 30,000/= ரூபாவைக் கடனாகவும் வழங்கியதோடு ஆலயத்துக்கான மங்க ளப் பொருட்களையும் ஆலய பரிபாலனசபையினருக்கு வழங்கியுள்ளோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ கடந்த முப்பத்திரெட்டு வருடங்களாக வழிபாட்டுக்கென ஆகமமுறைப்படி அமைந்த ஆலயம் இல்லாது அல்லலுற்ற இலிங்கநகர் இந்து மக்களுக்கு பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளரின் அயராத முயற்சியினால் பேரவையின் அனுசரணை யுடன் சிற்பசாத்திர விதிக்கமைய இலிங்கநகர்க் கோணலிங்கப் பிள்ளையார் ஆலயம் திருப்பணி செய்யப்பட்டு கடந்த ஆனித்திங்கள் ஆவர்த்தன பிரதிஷ்ட்டா மகா கும்பாபிஷேகம் நடைபெற்று,மண்டலாபிஷேகம் என்பன நடத்தப்பட்டு தற்போது நித்திய பூசைகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

★ பேரவை இவ் ஆலயப் பணிக்கு 20,000/= ரூபாவை நன்கொடையாகவும், 50,000/= ரூபாவை கடனாகவும் வழங்கியுள்ளது.

★ வழமைபோல இவ்வாண்டும் தீபாவளி தினத்தன்று பேரவையின் இந்து மகளிர் அணியினர் திருக்கோணமலை மாவட்ட தள வைத்தியசாலையிலுள்ள அனைத்து நோயாளர்கட்கும் உவந்தளிப்புப் பொதிகளையும் சிற்றுண்டியினையும் வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## அரங்கமா நகருளானே!

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா அமர ரேறே
ஆயர்தம் கொழுந்தே என்னும்
இச்சுவை தவிர யான்போய்
இந்திர லோகம் ஆளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகரு ளானே.

இவ்வாறு அரங்கத் தம்மானை பாடுகிறார் தொண்டரடிப் பொடியாழ்வார்.

தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா– உன்னைத்
தீண்டுமின்பந் தோன்றுதடா நந்தலாலா!

இவ்வாறு அன்பின் உயர்நிலை அனுபவத்தைப் பாடுகிறார் மகாகவி பாரதியார்.

அன்பு நெறியாக எங்கள் சமயநெறி மலர்வதற்கு ஆதாரமாக விளங்கியவர்கள் ஆழ்வார்களும் நாயன்மார்களும்.

அன்பு கனிந்துருகும் இன்பத் தமிழ் வெள்ளத்திலே சிவநெறி தழைத்தது.

–"சைவநெறி" என்ற நூலிலிருந்து

## சிவனின் வீரட்டானங்கள்

**சிவபெருமான் ஆன்மாக்களுக்காக எட்டு வீரச் செயல்களை செய்தருளினார். அவர் செய்த வீரட்டானங்கள் பின்வருமாறு**

1. **திருக்கண்டியூர் - பிரமன் தலை கொய்தருளியமை.**
2. **திருக்கோவலூர்- அந்தகாசுரனை சங்கத்-தருளியமை.**
3. **திருவதிகை- திரிபுரங்களை எரித்தருளியமை.**
4. **திருப்பறியலூர்- தக்கன் சிரங் கொய்தருளியமை.**
5. **திருவிற்குடி- சலந்தராசுரனை சங்கரித்தருளியமை.**
6. **திருவழுவூர்- கயாசுரனை அழித்தருளியமை.**
7. **திருக்குறுக்கை- மன்மதனை எரித்தருளியமை.**
8. **திருக்கடவூர்- இயமனை உதைத்தருளியமை.**

## சஞ்சிகைக் குழு

- திரு. சி. குருநாதன் - ஆசிரியர்
- திரு. க. சவுந்தரராசா - துணை ஆசிரியர்
- திரு. வ. தங்கராசா
- திரு. கு. கோணாமலை
- திரு. செ. சிவபாதசுந்தரர்
- திரு. க. கனகசபாபதி
- திரு. நா. காவிராசா
- திரு. கெ. தர்மகுலராசா
- புலவர். வை. சோமாஸ்கந்தர்
- திரு. பூ. புவனேஸ்வரன்
- திரு. சி. சிவதாஸ் - (விநியோகப் பொறுப்பாளர்)

## வைதிக சமயங்கள்

இந்து சமயம் ஒரு பொதுப்பெயர் இது சைவம், சாத்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், காபாலம், சௌரம் என்னும் சமயங்களைக் குறிக்கிறது. இந்து சமயம் என்னும் பெயர் வழக்கிற்கு வருமுன்னர், இச் சமயங்கள் யாவும் வைதிக சமயங்கள் என்னும் பொதுப் பெயரால் அழைக்கப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்து சமய வினாவிடைப் புதிர் – 17

1. **மாணிக்க வாசக சுவாமிகளின் தாய் தந்தையர் பெயர் என்ன?**
2. **மாணிக்கவாசக சுவாமிகளுக்கு சிவபெருமான் எம் மரத்தின் கீழ் திருவடி திட்சை கொடுத்தார்?**
3. **சிவபெருமான் சோதிப் பிழம்பாகக் காட்சி கொடுத்த இடம் எது?**
4. **நாம் இப்பிறப்பில் அனுபவிக்கும் வினை எது?**
5. **திருவரங்கம் எந்தக் கடவுளுக்குரிய ஆலயம்?**
6. **கிரியை நெறியில் நின்று முத்தியடைந்த சமயகுரவர் யார்?**
7. **ஔவையாரை கயிலாய மலைக்கு அழைத்துச் சென்றவர் யார்?**
8. **கோணேசர் ஆலய கோட்டைவாயிலில் காணப்படும் மீன் இலச்சினை எந்த மன்னரின் அடையாளத்தைக் குறிக்கிறது?**
9. **ஆழ்வார்களின் பெயர் நான்கு தருக.**
10. **ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரிற்கு எத்தனையாம் ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாடப் பட்டது?**

**குறிப்பு:** இப்பத்திரத்தில் அல்லது, இதனை இணைத்து விடை எழுதி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

பெயர்.................................................................................................

முகவரி.................................................................................................

.................................................................................................

முடிவு திகதி: 1996. 03. 15

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:-
ஆசிரியர், சிவநெறி,
தி. மா. இ. இ. பேரவை,
393, திருஞானசம்பந்தர் வீதி, திருக்கோணமலை.

## இந்து சமய வினாவிடைப் புதிர் – 16

பரிசு பெற்றவர்கள் விபரம்:

முதலாம் பரிசு: **செல்வன் ஜெ. ஜெயரஜீதரன்**
63, சாண்டிக்கோவ்,
திருக்கோணமலை.

இரண்டாம் பரிசு: **செல்வன். ப. சாந்தரூபசர்மா**
69, கஸ்கிஸன் வீதி,
திருக்கோணமலை.

மூன்றாம் பரிசு: **செல்வன். கோ. கோகுலதாஸ்**
148/4, மக்கேசர் வீதி உவர்மலை,
திருக்கோணமலை.

ஆறுதல் பரிசுகள்:
1. **செல்வி.ரா.மஞ்சுளா,** 74/6,சாண்டிக்கோவ்,திருமலை.
2. **செல்வி. எம். பிரான்ஸிஸ்,** 74/6, சாண்டிக்கோவ், திருக்கோணமலை.
3. **செல்வி. தே. லோஜின்மலர்.** தி/சூடைக்குடா பாரதி வித்தியாலயம், சூடைக்குடா, சம்பூர்.
4. **செல்வி. க.சண்முகப்பிரியா,** ஞானோதயம் அறநெறிப் பாடசாலை, சூடைக்குடா, சம்பூர்.
5. **செல்வி. பூ. ஜெயசிறி,** ஞானோதயம் அறநெறிப் பாடசாலை சூடைக்குடா, சம்பூர்.
6. **செல்வன். த. ரரயேஸ்வரன்,** ஞானோதயம் அறநெறிப் பாடசாலை, சூடைக்குடா, சம்பூர்.
7. **செல்வன். வி. சுரன்,** ஞானோதயம் அறநெறிப் பாடசாலை, சூடைக்குடா, சம்பூர்.

சரியான விடைகள்

1. இராமாயணம், மகாபாரதம், சிவரகசியம் 2. ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோ ஜாதம் 3. நிலம், நீர், காற்று, ஆகாயம். 4. திருநந்திதேவர், சனற்குமார முனிவர், சத்திய ஞானதரிசனிகள், பரஞ்சோதி மகா முனிவர். 5. 62 நாயன்மாரைபற்றி பாடியுள்ளார். 6. நித்திய பூசையில் ஏற்படும் குறைகளை நீக்க உற்சவங்கள் செய்யப் படுகின்றன. 7. அட்டாங்க நமஸ்காரம், பஞ்சாங்க நமஸ்காரம், ஏகாங்க நமஸ்காரம், திரியாங்க நமஸ்காரம். 8. தினைமாவையும் தேனையும் சேர்த்து விளக்கு செய்து அதனுள் திரி இட்டு நெய் விட்டு ஏற்றுதல். 9. தை - ஆனி வரை. 10. பூத சுத்தி, தான சுத்தி, லிங்க சுத்தி, திரவிய சுத்தி, மந்திர சுத்தி.

## இந்து சமய வினாவிடைப் புதிர் – 15

பரிசு பெறுவோர் விபரம்:

முதலாம் பரிசு: செல்வன் சரவணமுத்து கோணேஸ்வரன்
100, மின்சார நிலைய வீதி, திருக்கோணமலை.

இரண்டாம் பரிசு: செல்வன். ச. நிசாந்தன் ஆண்டு 9 விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், திருக்கோணமலை.

மூன்றாம் பரிசு: செல்வி. செ. புஸ்பாதேவி, ஸ்ரீ சண்முக இந்து மகளிர் கல்லூரி, திருக்கோணமலை.

ஆறுதல் பரிசுகள்:

1. செல்வன். எஸ். சுபாசன்
71, கந்தசுவாமி கோயில் வீதி, திருக்கோணமலை.
2. செல்வன். குணநேசன் ரஜனிவேந்தன், ஆண்டு 9
சரஸ்வதி வித்தியாலயம், லிங்கபுரம்.
3. செல்வன். த. ஐங்கரன்
39, மக்கேசர் வீதி, உவர்மலை,
திருக்கோணமலை.
4. செல்வி. ரி. சிந்துஜா, ஆண்டு 6
புனித பிரான்ஸிஸ் சவேரியார் மகா வித்தியாலயம்,
திருக்கோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவநெறிக்கு எமது வாழ்த்துக்கள்

# ஞானம் மெடிக்கல்ஸ் & கிளினிக்

217, திருஞானசம்பந்தர் வீதி திருக்கோணமலை.

தொலைபேசி : 026-22750

★ மேல்நாட்டு, உள்நாட்டு மருந்து வகைகள்
★ குழந்தை நலப்பொருட்கள்
★ ஏகவிநியோகஸ்தர்கள் (திருக்கோணமலை) கொடெக் படச்சுருள்கள், கமராக்கள், பற்றரிகள்
★ சகலவிதமான படச்சுருள்களும் குறைந்த கட்டணத்தில் குறுகிய காலத்தில் தரமாக கழுவிக் கொடுக்கப்படும்.
★ சிகிச்சை நிலையம்; வைத்திய கலாநிதி இ. பத்மநாதன் **R. M. O.**
★ முகவர்கள்: லிங்க் இம்போட்ஸ் & எக்ஸ்போட்ஸ் லிமிட்டட் உற்பத்திப் பொருட்கள்
★ முகவர்கள் : போ(**f**)ப்ஸ் (சிலோன்) லிமிட்டட் உற்பத்திப் பொருட்கள்

# GNANAM MEDICALS & CLINIC

**217, Thirugnanasampanthar Street,**
**Trincomalee.**

**✻ Dealers in Pharmaceutical Products and Agents for Kodak Films, Cameras, Batteries Etc.**

**✻ Under Taking Colour Films for Printing & Processing at Reasonable Rates.**

**✻ Agents for Link Imports & Exports (Pts) Ltd Products.**

**✻ Agents for Forbes (Ceylon) Ltd Products.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோணமலைத் தமிழறிஞர் **திரு. த. கனகசுந்தரம்பிள்ளை** அவர்களின் நினைவு விழா வழமைபோல இவ்வருடமும் பேரவையால் நடத்தப்பட்டது. அப்போது பேரவையின் துணைத் தலைவர் **திரு. கு. கோணாமலை** அவர்கள் தலைமையுரை ஆற்றுகிறார்.



பேரவையால், அகதிகளுக்கான ஐக்கிய இராச்சிய உயர்ஸ்தானிகராலய நிதி உதவியுடன் உருவாக்கப்பட்ட தம்பலகமம் குழாய் மூலக் குடிநீர்த் திட்டத்தை ஆரம்பிக்க வருகை தந்த யு. என். எச். சி. ஆர். திருக்கோணமலைத் திட்ட இணைப்பாளர் **செல்வி. ரேசி பக்கன் மேயர்** அவர்களுடன் தம்பலகமம் பிரதேசச் செயலாளர் **திரு. எச். ஏ. விஜயசூரியா**, பேரவையின் மதிப்பார்ந்த பொதுச் செயலாளர் **திரு. செ. சிவபாதசுந்தரம்** பேரவைத்திட்ட அலுவலர் **திரு. ந. சிங்காரவேல்** மற்றும் பிரமுகர்கள் காணப்படுகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

திருக்கோணமலை மாவட்டத்தின் பல பாகங்களிலும் சமயப்பணியும் சமூகப்பணியும், அகதிகளுக்கான பணிகளையும் ஆற்றுகின்ற முதன்மையான இளைஞர்களின் அமைப்பே

திருக்கோணமலை மாவட்ட

## இந்து இளைஞர் பேரவை ஆகும்.

## இதன் வளர்ச்சிக்கு தாராளமாக உதவுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனி எழுத்தமைப்பு, ஓவ்செற் அச்சமைப்பு, ஸ்ரீ கணேச அச்சகம், திருக்கோணமலை. ☎ : 026-22617